உ
சிவமயம்


# சைவநீதி
# SAIVANEETHI



| மலர் 8 | தாரண - புரட்டாதி | September - October 2004 | இதழ் 6 |
|---|---|---|---|




ரூபா 25/=

# பொருளடக்கம்


பக்கம்

1. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருவடித் திருத்தாண்டகம் .... 2

1. நவராத்திரி .................................... 4

2. திருவாசகத்தில் அச்சப்பத்து .................................... 7

3. சாதுக்கள் தரிசனம் .................................... 11

4. சைவபூஷணம் .................................... 13

5. கந்தர் அலங்காரம் .................................... 15

6. தந்தை தனயனுக்குத் தந்த தகவுரை .................................... 17

6. சிவாலய தரிசனம் .................................... 21

7. புராணபடனம் .................................... 23

8. ஸ்ரீகுண்டல விகுண்டலர் .................................... 24



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள்

உ

சிவமயம்

சைவநீதி SAIVANEETHY

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி



மலர் 8 தாரண - புரட்டாதி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 6



**தொடக்குனர்:**
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர:**

**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள**

**திரு. வ. ஆ. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர்
தேவஸ்தானம

**திரு. அ. கந்தசாமி**
*Chairman U.P.S.*

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷமி அச்சகம்

**விநியோகம்:**
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**
**திரு. செ. நவநீதகுமார்**
30, ரம்யா ரோட், கொழும்பு-04.

தொடர்புகட்கு: *7.30 p.m. to 7.30 a.m.*

தொலைபேசி : 2580458


## யார் உறவு

செல்வந்தராய் சிறப்புடன் வாழ்ந்த காலத்தில் சேர்ந்திருந்து சுகம் அனுபவித்துப் பின்னர் செல்வந்தீர்ந்து வறுமையுற்ற காலத்தில் விட்டு நீங்குபவர் உறவாகமாட்டார். இந்நிலை ஒரு பொதுவான தன்மையாகக் காணப்படுகிறது. செல்வம் இருந்த காலத்தும் கூட இருந்து சுகத்தை அனுபவித்தது போல வறுமையுற்ற காலத்தும் கூட இருந்து இன்ப துன்பங்களை அநுபவிப்பவரே உண்மையான உறவாவார். அவர்கள் தான் அன்புடையவர்.

குளத்திலே நீர் நிரம்பியிருக்கின்ற பொழுது பறவைகள் குளத்துடன் உறவு கொண்டிருக்கும். நீர் வற்றியதும் குளத்தை விட்டுப் பிரிந்து சென்றுவிடும். இப்படியான குணநலமுடையவர் உறவு உடையவர் அல்ல. அந்தக் குளத்திலே கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகியன நீர் வற்றிய காலத்தும் குளத்தை விட்டுப் பிரியாது அங்கு இருந்து உலரும். இப்படியானவர்கள் தான் உறவுகள் உடையவர்கள்.

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

உண்மையான உறவை அல்லது நட்பை இடர்வந்த காலத்தில் அறிந்து கொள்ளலாம். இடரிலும் ஒரு பயன் இருக்கிறது என்பார் வள்ளுவர். அதுதான் நண்பரை அல்லது உறவினரை அளக்கும் அளவுகோல்.

கேட்டினும் உண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்

எவர் தாம் எக்காலத்தும் ஒட்டியிருந்தாலும் அவர்களால் பயனேதும் இல்லை. "இறைவா அஞ்சல்" என்று நீ எனக்கு அருள் புரிய வேண்டும் அமரரேறே என்கிறார், சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கங்கை வார்சடை யாய்கண நாதா கால காலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றனே பூத நாதனே புண்ணியாபுனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனேதீர்த்த னேதிருவாவடுதுறையுள்
அங்க ணாஎனை அஞ்சல் றருளாய் ஆர்எனக்குற வமரர்கள்ஏறே

உ
சிவமயம்

அகத்தியர் தேவாரத் திரட்டு

## திருநாவுக்கரசு சுவாமிகள்

## ஆறாந்திருமுறை - திருவடித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
அருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழுது சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணா மடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும் மடி
விரவுநீர்த் தென் கெடில நாடன் னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன் னடி. 1

கொடுவினையா ரென்றுங் குறுகா வடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் மடி
படுமுழவம் பாணி பயிற்றும் மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த வடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருதும்மடி
நெடுமதியங் கண்ணி அணிந்தா னடி
நிறைகெடில வீரட்டம் நீங்கா வடி. 2

வைதெழுவார் காமம்பொய் போகா வடி
வஞ்சவலைப் பாடொன் றில்லா வடி
கைதொழுது நாமேத்திக் காணும் மடி
கணக்கு வழக்கைக் கடந்த வடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும் மடி
நீள்விசும்பை யூடறுத்து நின்ற வடி
தெய்வப் புனற் கெடில நாடன்னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன் னடி. 3

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் மடி
அழகொத்த லாகா அருட்சே வடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த வடி
சோமனையுங் காலனையுங் காய்ந்த வடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல வடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன் னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன் னடி. 4

ஒருகாலத் தொன்றாகி நின்ற வடி
ஊழிதோ றூழி உயர்ந்த வடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும் மடி
இன்புற்றார் இட்டபூ ஏறும் மடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத் தெஞ் செல்வன் னடி. 5

திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
உருவிரண்டு மொன்றோ டொன் றொவ்வாவடி
உருவென்று ணரப் படாத வடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத் தெஞ் செல்வன் னடி. 6

உரைமாலை யெல்லா முடைய வடி
உரையால் உணரப் படாதவடி
வரைமாதை வாடாமை வைக்கும் மடி
வானவர்கள் தாம் வணங்கி வாழ்த்தும் மடி
அரைமாத் திரையில் அடங்கும் மடி
அகலம் அளக்கிற்பா ரில்லா வடி
கரைமாங் கலிக்கெடில நாடன் னடி
கமழ் வீரட்டானக்காபாலி யடி 7

நறுமல ராய்நாறு மலர்ச்சே வடி
நடுவா யுலகநாடாய வடி
செறிகதிருந் திங்களுமாய் நின்ற வடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்த வடி
மறுமதியை மாசு கழுவும் மடி
மந்திரமுந் தந்திரமும் ஆய வடி
செறிகெடில நாடர்பெருமா னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன்னடி. 8

அணியனவுஞ் சேயனவு மல்லா வடி
அடியார்கட் காரமுத மாய வடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி
பற்றற்றார் பற்றும் பவள வடி
மணியடி பொன்னடி மாண்பா மடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
தணிபாடு தண்கெடில நாடன் னடி
தகைசார் வீரட்டத்தலைவன் னடி. 9

அந்தா மரைப்போ தலர்ந்த வடி
அரக்கனையும் ஆற்றல் அழித்த வடி
முந்தாகி முன்னே முளைத்த வடி
முழுங்கழலாய் நீண்ட வெம் மூர்த்தி யடி
பந்தாடு மெல்விரலாள் பாகன் னடி
பவளத் தடவரையே போல்வா னடி
வெந்தார் சுடலைநீ றாடும் மடி
வீரட்டங் காதல் விமலன் னடி. 10

திருச்சிற்றம்பலம்.

# நவராத்திரி

சைவப்புலவர் வ. செல்லையா

"கன்னித் திங்கள் வருகுது ஐயா கருத்துடன் நவராத்திரிக்கு" என்பது ஒரு பழம் பாடல் தொடக்க அடியாகும். கன்னித்திங்கள் என்பது புரட்டாதி மாதமாகும். கன்னி ராசியில் சூரியன் சஞ்சாரம் செய்யும் காலத்தைக் கன்னி மாதம் என்று அழைப்பர் சோதிட வல்லுனர். மேடம் முதலாகப் பன்னிரண்டு ராசிகளிலும் சூரியன் சஞ்சரிக்குங் காலத்தை அவ்வவ் ராசிப் பெயரால் அழைப்பர். மேடத் திங்கள் சித்திரை மாதமாகும். இப்படியே மாதப் பெயர் தொடரும். திங்கள் என்றால் மாதம் என்பது பொருள். கன்னி என்றால் பெண் ஆகும். ஆகவே பெண்ணைக் குறித்து ஒரு இராசி. அதன் பெயரில் ஒரு மாதப் பெயர் வருவதால் அம் மாதமும் பெண்ணை நினைவுபடுத்தி நிற்கின்றது.

புரட்டாதி மாதம் பிறந்துவிட்டதென்றால் நவ ராத்திரி உருவாகிறது என்று எல்லோர் மனதிலும் ஒரு எண்ணம் உருவாகிறது. நவராத்திரி சக்தி வழிபாட்டிற்குரிய விழாவாகும். பெண்ணின் பெயர் பெறும் மாதத்தில் பெண்ணாகிய சக்தியை வழிபடுவது எவ்வளவு பொருத்தமானதென்பது சிந்திக்கத்தக்கது. அங்ஙனம் விழாவை அமைத்து வழிபட்டு வந்த நம் முன்னையோரையும் நினைவு கூர்தல் நமது நன்றிக் கடனாகும்.

எல்லார் மனதிலும் நின்று நிலைக்கக் கூடிய நவராத்திரிப் பாடலைப் பார்ப்போம்.

**கன்னித் திங்கள் வருகுது ஐயா**
**கருத்துடன் நவராத்திரிக்கு**
**கன்னகை அம்மன் பூசைகள் செய்யக்**
**காசு பணம் வேண்டும்**
**பொன்னைப் போலே நிறமுள்ள கனியும்**
**பூமடை காய் மடையாம்**
**புதிதாய் அப்பம் இளநீர்ப் புஷ்பம்**
**புனுகு ஜவ்வாதுடனே**
**வன்னப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள்**
**மாதா மனைதோறும்**
**வாங்கு பணங்கள் அரிசிகள் கொண்டு**
**வந்திடுங்கள் பூசைக்கு**
**அன்னப்பரிமள குங்கும மிரிகம**
**அழகிய மெய்யாளே**
**அம்பிகை கட்சிக் காமக்கோட்டை**
**அபிராமித்தாயே'**

கன்னிக்குப் பூசை கன்னிமாதத்தில் வைக்கப்பட் டிருக்கிறது. இது மிகப் பொருத்தமானதே. அது நவராத்திரியாக அமைகிறது. சக்தியும் சிவமுமாய தன்மையே இவ்வுலகமெல்லாம் என்பது சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிவு. இங்ஙனமாய சக்தியும் சிவமுமே எங்கள் தெய்வம். அத் தெய்வமாகிய சக்தியை வழிபட நவராத்தி ரியையும், சிவனை வழிபட சிவராத்திரியையும் கைக்கொண்டு வருகிறார்கள். சைவநாயன்மார்கள் பூசைவழிபாடுகளுக்கும், தவ, செப தியானங் களுக்கும் இராக்காலம் மிகமிக உயர்ந்தது, யாவுமடங்கி அமைதியாக இருக்கும் காலம் இராக்காலம். அக்காலம் மனஞ்சஞ் சலமற்று

**கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு**
**அல்லவை செய்தொழுகும் வேந்து** 551

பொருளாசையால் குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு முறையற்ற செயல்களைச் செய்து வரும் அரசன், கொலைத் தொழிலை மேற்கொண்டவரை விடக் கொடியவனே ஆவான்.

அமைதியாகப் பூசை வழிபாட்டில் ஈடுபட வாய்ப்பு அதிகம்.

நவராத்திரி, சிவராத்திரி முதலாந் தினங்களைச் சைவ புண்ணிய காலங்கள் என்று பெரியோர்கள் கூறுவர். இவை சிவ விரதங்களாகவும் சிவவிழாக்களாகவும் கொள்ளப்படும். நவராத்திரி விரதமாகவும், விழாவாகவும் அநுட்டிக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலும் சைவ புண்ணியக் காலங்கள் ஆலயங்களிலேயே கொண்டாடப் பெறுவன. ஆனால் நவராத்திரியோ ஆலயங்களிலும், மடாலயங்களிலும், வித்தியாலயங்களிலும், நூல்நிலையங்களிலும், தொழிலகங்களிலும் ஏன் வீடுகளிலுங் கூடக் கொண்டாடப்படுகிறது. ஆதலின் மக்கள் மத்தியில் இது சிறப்பு மிக்கதாகக் கொள்ளப்படுகிறது.

புராண நாயகர்களும், இதிகாச புருஷர்களும் மேன்மை பெற வழிகாட்டியது நவராத்திரியென்று அறிஞர் கூறுவர். அவர்களும் இந்நவராத்திரி விழாவெடுத்துப் பூசை வழிபாடு செய்து, விரத அநுட்டானங்களை மேற்கொண்டு தங்கள் வெற்றியை நிலைநாட்டியுள்ளனர். முன் நாள் நவராத்திரி பூசை துர்க்கை பூசையென்றும் அழைக்கப்பட்டு வந்தது. இந்தப் பூசையில் ஸ்ரீ வித்தியாமந்திரங்களையும் உபதேச மந்திரங்களையும் பெரியோர் செபம் செய்து உருவேற்றிக்கொள்வது வழக்கம்.

புரட்டாதி மாதம், பிதுர்வழிபாடு, கிரகவழிபாடு, மூர்த்திவழிபாடு என்பவற்றிற்குச் சிறந்து விளங்குகின்றது. பிதுர்களுக்கு மாளயமும், சனீஸ்வரனுக்குப், புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் அநுட்டித்து எள்ளெண்ணெய் எரித்தலும், சக்தியைக் குறித்து நவராத்திரி விரதம் அநுட்டித்தலும் இம்மாதத்தில் நிகழ்வதால் இம் மாதம் விசேடம் பெறுகிறது. பிதுர்தோஷம், சனிதோஷம் நீங்கித் தெய்வ அனுக்கிரகத்தைப் பெற இம்மாதம் உதவுகிறது எனலாம்.

புரட்டாதி மாத வளர்பிறைப் பிரதமை தொடக்கம் நவமி ஈறாகவுள்ள ஒன்பது நாட்களும் நவராத்திரி காலம் எனப்படும். பத்தாவது நாள் தசமியாகும். அந்நாளை மக்கள் வெற்றியைத் தரும் நாளாகக் கொண்டு வழிபாடு செய்வர். அதனால் அந்நாளை விஜயதசமி என்று அழைப்பர். அர்ச்சுனனாகிய விஜயனால் மிகவும் பக்தி சிரத்தையோடு அநுட்டிக்கப்பட்டதனால் இத்தினம் விஜயதசமி என்று பெயர் பெற்றதாயிற்று என்பருமுளர்.

நவராத்திரி பூசையை அமாவாசையன்று அங்குரார்ப்பணஞ் செய்யவேண்டும் அல்லது பிரதமைத் தினத்தன்று காலை விக்கினேஸ்வர பூஜையைத் தொடங்கி அத்துடன் நவராத்திரியை ஆரம்பிப்பர். நவராத்திரி பற்றி தேவிமகாத்மியம், மார்க்கண்டேயர் புராணம், தேவிபாகவதம், அருணாசலமான்மியம், என்பவற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

துர்க்கா தேவியை முதற்கொண்டு இப்பூசை நடைபெறுகின்றது. துர்க்காதேவியை வழிபடுபவர்களுக்குத் துன்பத்தின் சாயல் கூடத் தொடராது. தரித்திரம், துக்கம், பயம் என்பனவற்றைப் போக்கி உலகத்துக்கு உபகாரஞ் செய்பவளே துர்க்கை.

இங்ஙனமாய துர்க்கையின் பேரருளை அறிந்து நவராத்திரி வழிபாட்டைக் காலாகாலமாக அநுட்டித்துப் பெருவிழாவெடுத்தனர். ஸ்ரீராமர், ஸ்ரீகண்ண பிரான், பாண்டவர்கள் ஆகியோர் நவராத்திரி விழாவெடுத்து வழிபட்டதாக வரலாறு கூறுகின்றது.

நவராத்திரி காலங்களில் பகலெல்லாம் நோன்பிருந்து, இரவு தேவியின் பூசை வழிபாடு

*More cruel than the man who lives the life of a murderer is the king who gives himself to oppress and act unjustly (towards his subjects)*
*551*

நிறைவுற்றதும் சிற்றுண்டி உட்கொள்வது நன்று. இந்த ஒன்பது நாட்களிலும், அன்னைக்குப் பானகமும் தேனும் நிவேதிப்பது சாலச் சிறந்தது. இக்காலத்தில் வீட்டுக்கு வரும் எல்லாச் சுபாசினிகளையும் ஜென்ம விரோதிகளாகவிருந்தாலும் அவர்களை அன்னையாகப் பாவித்து பூஜித்து அவர்களுக்குரிய மரியாதைகளைச் செய்ய வேண்டும்.

இக்காலங்களில் உபாசகர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஜெபஞ் செய்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு வலுப் பெறுகிறார்கள். இந்நாட்களில் தேவி மாகாத்மியம் படிப்பவர்களும், கேட்பவர்களும், பணக்கவலை, மனக்கவலை நீங்கிச் சுகப்பேறுபெறுவர்.

நவராத்திரி ஒன்பது நாட்களிலும் முறையே சைவபுத்திரி, பிரமசாரினி, சந்திரகாணடி, கூமாண்டி, ஸ்கந்தமாதா, காத்தியாயினி, காலராத்திரி, மகாகெளரி, சித்திதா என்னும் நவதுர்க்கையாக அன்னை ஒளிவிடுகிறாள். அதன்காரணமாகத் தான் கன்னியா பூசையில் அந்தந்த நாளுக்குரிய தேவியாகப் பெண் குழந்தைகளை அலங்கரித்து வழிபாடு செய்யப்படுகிறது.

நவராத்திரியில் தேவியைக் கும்பத்திலே ஆவாகித்து வழிபடும் முறை இன்றும் நடைமுறையில் உள்ளது. இதனைக் கும்பம் வைப்பு, கும்பபூஜை என்று அழைப்பர். கும்பத்தின் அடியில் புற்றுமண் இட்டு நவதானியங்களைத் தூவி நீர் வார்த்து முளைக்க வைப்பர். இதன் வளர்ச்சி, செழிப்பைக் கொண்டு எதிர்காலப் பலனையும்அறிதல் வழக்கம். விஜயதசமி பூஜை முடிவில் விபூதிப் பிரசாதத்துடன் நவதானிய முளைகளையும் வழங்குவர். அதனை அன்னையின் அருட்பிரசாதம் என்று பெற்றுக் காதுகளில் அணிவர்.

கும்பத்தில் முதல் மூன்று நாட்களும் வீரத்தின் அதிபதியாகிய துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தின் அதிபதியாகிய இலக்குமிக்கும், இறுதி மூன்று நாட்களும் கல்வியின் அதிபதியாகிய சரஸ்வதிக்கும் அவ்வவ் மந்திரங்களைக் கொண்டு பூஜை நடாத்தப்படும். இக்காலங்களில் அவ்வவ் தெய்வத்திற்குரிய மலர்களால் (பச்சை, சிவப்பு, வெள்ளை மலர்களால்) அர்ச்சிக்கப்படும். பழவகை நிவேதனப் பொருட்களும் நிறமுறையில் சமர்ப்பிப்பதுண்டு. வீரம், செல்வம், கல்வி, என்பன மனிதர்க்கு இன்றியமையாத பொருட்கள். இவை தரவேண்டி விரத அநுட்டானங்களையும் மேற்கொள்வர். சரஸ்வதி பூசை வழிபாட்டில் இறுதிநாள் ஆயுத பூஜை முதலிடத்தைப் பெறுகின்றது. பாடசாலைகளில் புத்தகங்களும், தொழிலகங்களில் அவ்வவ் தொழிலுக்குரிய ஆயுதங்களும் வைத்துப் பூஜை சிறப்பாக நடைபெறும். மறுநாள் விஜயதசமிப் பூஜையின் பின் அவற்றை எடுத்து அன்னையைப் பூஜித்து உபயோகிப்பர். இக்காலத்தில் ஏடு தொடக்கலும் நடைபெறுகிறது.

நவராத்திரி முடிவிலுள்ள விஜயதசமியில் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் பன்னீர் வாழைவெட்டு என்ற சிறப்பு நிகழ்ச்சி இடம் பெறும். அன்று மாலை சில ஆலயங்களில் மானம்பூ விழா நடைபெறும். இந்தியாவில் நவராத்திரி முடிவில் பத்தாவது நாளைத் தசராவாகக் கொண்டு சிறப்பான விழா எடுக்கிறார்கள். இவ்விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து மகிழ்வதாக அறிகிறோம்.

**வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு** 552

அதிகாரமும் ஆட்சியுரிமையும் உள்ள அரசன் குடிமக்களிடம் பொருள் வேண்டுதல், வேல் ஏந்தி நின்ற வழிப்பறிக் கள்வன், தனியே செல்லும் வழிப் போக்கனைப் பார்த்து, "உன் கைப்பொருளைக் கீழே வை" என ஏவுவது போன்றது.

சென்ற இதழின் தொடர்ச்சி.....

# திருவாசகத்தில் அச்சப்பத்து

**முருகவே பரமநாதன்**

சமயகுரவர் நால்வரும் சிவனையே முழுமுதற் தெய்வமாக வழிபட்டு, வாழ்ந்து காட்டியவர்கள். மறந்தும்பிறன் தொழாதவர்கள். "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே" (திருச்சதகம் 1) என்று பாடியவர் மாணிக்கவாசகர். சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு என்பது ஔவை வாக்கு. இப்பெரிய உண்மையை சைவப் பெருங்குடி மக்கட்கு உணர்த்த எழுந்ததே அச்சப்பத்து. முதற்பாடலே முகவுரையாக உபோற்காதமாக அமைந்துள்ளது.

**புற்றில்வாள் அரவும் அஞ்சேன்**
**பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்**
**கற்றைவார் சடையெம் அண்ணல்**
**கண்ணுதல் பாதம் நண்ணி**
**மற்றும் ஓர் தெய்வம் தன்னை**
**உண்டு என நினைந்து எம்பெருமான்**
**கற்றிலா தவரைக் கண்டால்**
**அம்மநாம் அஞ்சுமாறே**

அச்சப்பத்து 1

வாள் - ஒளியுள்ள, கற்றைவார்சடை - திரண்டநீண்டசடை, கண்ணுதல் - நெற்றிக்கண்

சிவனையே முழுமுதற் தெய்வமாகப் பற்றி வழிபடக் கற்றுக் கொள்ளாதவர்களைக் கண்டு அஞ்சினார் வாதவூரர். இன்று பல தெய்வ வணக்கத்தையும், தெய்வத்தையே ஏற்காதவர் களையே கொண்டாடியும் பரசமய வழிபாட்டை மேற்கொண்டும் வாழும் ஈழத்தமிழர்களைக் காணமுடிகிறது. இவர்கள் இப்பத்தைப் படித்தல் நன்று. "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று - தேடி - அலையும் அறிவிலிகாள் - பல் - ஆயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்டாமெனல் அறியீரோ? எனப் பாரதியும் பாடினார் (அறிவே தெய்வம் !) பல தெய்வ வழி பாட்டை மேற்கொள்ளும் சைவநெறிக்கில்லை என்பதை மணிவாசகர் திருவாசகம் முழுவதிலும் எடுத்து இயம்பி யுள்ளார். இரு பாடல்கள் வருமாறு:

**அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்**
**பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே**
**பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற**
**மெய்த் தேவர் தேவர்க்கே சென்றூதாய்**
**கோத்தும்பீ**

திருக்கோத்தும்பி 5

பொய்த்தேவு - பொய்யான தெய்வங்கள், பத்து - பற்று

**உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்**
**சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்**
**கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்**
**செயலைப் பரவிநாம் தெள் ளேணம்**
**கொட்டாமோ.**

திருத்தெள்ளேணம் 17

உவலைச் சமயங்கள் - பொய்ச்சமயங்கள், ஒவ்வாத சாத்திரம் - ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத நூல்கள், சவலை - சபலம், மனக்குழப்பம், பரவி - புகழ்ந்து.

*The request (for money) of him who holds the sceptre, is like the word of him who stands with a weapon (at your breast) and says "give".* 552

மூன்றாம் ஏழாம் பாடல்களிலே தில்லைக் கூத்தனை வழிபடாதவர்களை நினைந்து அச்சப்படுகிறார்.

**என்பெலா முருக நோக்கி**
**அம்பலத்து ஆடுகின்ற**
**என்பொலா மணியை ஏத்தி**
**இனிது அருள் பருகமாட்டா**
**அன்பு இலாதவரைக் கண்டால்**
**அம்ம நாம் அஞ்சுமாறே**

அச்சப்பத்து 3

பொல்லுதல் - துணைத்தல், செதுக்குதல்
பொலாமணி - துளைக்கப்படாத மாணிக்கம் (பொல்லாப்பிள்ளையார் போல)

திருநீறு பூசும் போது சிவசிவ என்று சொல்லிக் கொண்டோ, இறைவன் புகழைப் பாடிக் கொண்டோ பூச வேண்டும் என்ற தொன்மையான முறையை நடைமுறையிற் கொள்ள வேண்டும். இதுவே உயரிய சைவநெறி. அதைப் போல, உள்ளம் மட்டு மன்றி, எலும்பே உருகும் வண்ணம் கூத்தப் பிரானைப் பாடிப்பணிந்து - அன்பால் அவனை வழிபட்டால் - அருளைப் பெறலாம். இதை நடைமுறைப்படுத்தாதவரைக் கண்டு மனம் நெகிழ்ந்து - அச்சத்தை வெளிப்படுத்தும் பாடல் இது.

**புகை முகந்து எரிகை வீசிப்**
**பொலிந்த அம்பலத்துள் ஆடும்**
**முகை நகைக் கொன்றை மாலை**
**முன்னவன் பாதம் ஏத்தி**
**அகம் நெகாத வரைக் கண்டால்**
**அம்ம நாம் அஞ்சுமாறே**

அச்சப்பத்து 7

கையிலே அனலேந்தி ஆடல் செய்கின்றான் தில்லை நடராசன் மொட்டுகள் விரியும் மஞ்சள் நிறமான கொன்றை மாலை சூடி இருக்கிறான் அவன். எனவே வாலறிவினன் ஆன அப் பெருமானின் திருவடிகளைப் புகழ்ந்து, மனம் கசியாத வரைக்கண்டு அஞ்சுகிறார் ஆளுடை அடிகள். எம்பெருமானின் திருப்பாதங்களைப் போற்றாதவர்களைக் கண்டு அஞ்சும் நிலைப் பாட்டை ஆறாம் எட்டாம் வாசகங்களில் சொல்கிறார்.

**தோள் உலாம் நீற்றன் ஏற்றன்**
**சொல் பதம் கடந்த அப்பன்**
**தாள தாமரைகள் ஏத்தித்**
**தடமலர் புனைந்து நையும்**
**ஆள் அலாதவரைக் கண்டால்**
**அம்ம நாம் அஞ்சுமாறே.**

அச்சப்பத்து 6

நையும் - உருகும்

சொல் பதம் கடந்த தொல்லோன் காண்க (திருவண்டப்பகுதி 40) மனம் உருகிப் பாடிப் பணியவேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். பரவுவார் பசிதீர்ப்பவன் இறைவன். பாவிப்பார் பாவம் அறுப்பவன் அல்லவா அவன்.

**வெறிகமழ் சடையான் அப்பன்**
**விண்ணவர் நண்ண மாட்டாச்**
**செறிதரு கழல்கள் ஏத்திச்**
**சிறந்து இனிது இருக்கமாட்டா**
**அறிவு இலாதவரைக் கண்டால்**
**அம்ம நாம் அஞ்சுமாறே.**

மேலது 8

வெறி - வாசனை, செறிதரு - நெருங்கிய இறைவனை அந்தரங்க சுத்தியோடு ஏற்றித்

**நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும்** 553

அதிகாரமும் ஆட்சியுரிமையும் உள்ள அரசன் குடிமக்களிடம் பொருள் வேண்டுதல், வேல் ஏந்தி நின்ற வழிப்பறிக் கள்வன், தனியே செல்லும் வழிப் போக்கனைப் பார்த்து, "உன் கைப்பொருளைக் கீழே வை" என ஏவுவது போன்றது.

தொழுதால் சிறப்பாக வாழலாம். இதை உணராமல் வீணே வாழ்க்கையைக் கழிப்பவர் களைப் பார்த்துப் பெருந்துறைப் பிள்ளை அச்சப்படுகின்றார். சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோமல்லோம் எனப் பேசிய மூவர் வழி நின்று வாழ்பவர்களே உண்மைச் சைவர்கள். செத்துப் பிறக்கின்ற தெய்வ வணக்கத்தை அவர்கள் ஏற்பதும் இல்லை. இத் திருட்டாந்தத் தைப் புறக்கணியாத வாதவூரடிகள் சிவ வணக்கத்தை மேற்கொண்டு சைவத்தை நிறுவினார்கள். திருமாலும், பிரம்மாவும் தேடியும் காணாத சிவனின் திருவுருவையன்றி வேறு தெய்வத்தைப் பாவிக்காதவர்களே மெய்ச்சமயிகள். அப்படி வேறுருத் தீண்டுபவர் களை அருவருத்து ஒதுக்காதவரைக் கண்டு அஞ்சினார் சுவாமிகள்.

**இருவரால் மாறு காணா**
**எம்பிரான் தம்பிரான் ஆம்**
**திருஉரு அன்றி மற்றோர்**
**தேவர் எத்தேவ ரென்ன**
**அருவரா தவரைக் கண்டால்**
**அம்மா நாம் அஞ்சுமாறே**

மேலது 2

சுவாமிகளின் காலத்தில் வைணவம், பௌத்தம் என்பன சைவத்தை நலிவடையச் செய்தன. ஏகான்மவாதமும் வலுப்பெற்றிருந்த காலமது. சங்கரர்க்குப் பிந்தியவர் வாத வூரடிகள். இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து சைவத்தை வளர்க்கப் பெரிதும் உழைத்த அவரை இப்படிப் பாடவைத்தது அக்கால நிலைமைதான்.

காலத்துக்குக் காலம் சைவம் பிற சமயதாக் கங்களை எதிர்க்க வேண்டிய ஒருநிலைப்பாடு இருந்தது. இன்றும் அந்நிலைமை மோசமடைந் துள்ளமை வெளிப்படை. யாழ்மண்ணில் ஐயப்பன் ஆலயமும், ஆஞ்ஞனேயர் கோயிலும் எடுப்பதைச் சைவசித்தாந்திகளே ஆதரவு கொடுக்கிறார்கள். ஸ்மார்த்தர்கள் சைவத்தை எதிர்க்கிறார்கள். வன்னியிற் கிறீத்தவம் வளரச் சைவம் தேய்கிறது. பிற தெய்வம் தொழாத சைவர்கள் அந்தோனியார் ஆலயம் போவர். மடுமாதா கோயில் வேளாங்கண்ணிமாதா கோயில் செல்வர். தென்னிந்திய யாத்திரை மேற்கொள்வோர் நாகூர் போவர். மறு சமயத்தவர் சைவ ஆலயங்களைத் தரிசிப்ப துண்டா?

புலம்மாறி வாழும் மண்ணில் பல்லாயிரம் சைவசமயிகள் மதம் மாறியுள்ளனர். எல்லா ஆலயங்களிலேயும் அனுமார் வழிபாடு, ஐயப்ப வழிபாடு மேற்கொள்ளப்படக் காணலாம். சிவன் கோயிலிலே வேற்றுமதப் படங்களை வைத்து ஆராதிக்கிறார்கள். சைவாலயங்களிலே கிறீத்தவ கொண்டாட்டம் இடம் பெறுகிறது. மேலை நாடுகளிற் கிறீத்தவ ஊடுருவல் நம் சமயத்தை வெகுவாகப் பாதித்துள்ளமை வெளிப்படை. டிசம்பர் 25, டிசம்பர் 31, சனவரி முதல் நாள். சைவாலயங்களைத் திறந்து வைத்திருக்கக் காணலாம். இத்தினங்கட்கும் சைவமக்கட்கும், சைவாலயங்களுக்கும் என்ன தொடர்பு. கிறீத்தவப் புத்தாண்டை கொண்டாடுவதற்கு ஒரு போர்வையிட்டு, குடும்ப நலம் பேணும் நாளெனப் பிரகடனப்படுத்தி விஷேச பூஜையும், ஆராதனை, அபிஷேகம் அர்ச்சனை மேற்கொள் ளும் ஆலயங்கள், சைவமரபை ஓரம்கட்டிப் பிற மதத்தை ஆதரிக்கின்றன. காரணம் மடிநிரப்புத லேயாம். இந்நிலை கண்டும் அருவருக்காத வர்கள் அதிலே பங்கு பற்றுபவர்கள் திருவாசகம் முற்றோதியென்ன பயன். உமிக்குத் திகைசலிப்பதாகும். இவர்கள்

*The country of the king will daily fall to ruin, who does not daily examine into and punish (crimes)* *553*

அச்சப்பத்தை ஆழமாகப் படிப்பது நன்று.

நம் ஆலயங்களின் போக்கையும், சடங்கு களையும், பொதுமக்கள் நிலைபரத்தையும் கண்ட பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் இவ்வண்ணம் குறிப்பிடுகிறார்:-

"சைவசமயிகள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு, பூசைமுதலிய புற வழிபாட்டில் ஆடம்பரமாகப் பொழுதைப் போக்கும் போலிச் சைவர்களைப் பற்றியதே இப்பதிகம் என்று நினைக்கத் தோன்றுகின்றது. உள்ளத்தில் உருக்கம் இல்லாமல், அதற்கு மூலமான அன்பில்லாமல் போலிப் பூசை செய்பவர் எக்காலத்திலும் உண்டு. பொறுமைக்கு ஒரு எல்லையாகவும், அமைதிக்கு ஒரு அடித்தள மாகவும் இருந்த நாவரசர் பெருமானே இந்தப் போலிச் சைவரைக் கண்டு மனம் நொந்து போயிருந்தார். ஒரே பாடலில், ஓர் அடியில், உண்மையான் பூசை புரிபவர்களை "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்" ( திருமுறை 5-90.9) என்று பாடிய நாவரசு, அடுத்த அடியில் "பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே" என்றல்லவா பாடியுள்ளார்? ஆக, போலியாகப் பூசை புரிபவர்களைக் கண்டு இறைவன் சிரிக்கின் றான் என்கிறார் அடிகளார். இவர்களைக் கண்டு இறைவன் சிரிக்கலாம். ஆனால், பாண்டி நாட்டின் தலைமை அமைச்சர் சிரிக்கத் தயாராக இல்லை. இந்தப் போலிகளைக் கண்டு ஆயிரக்கணக்கானவர்கள் ஏமாந்து, இவர்களே உண்மைச் சைவர்கள் என்று நம்பி வணக்கம் செய்கின்றனர். இந்தப் போலிகளால் மக்கள் ஏமாறுகின்றனர். இவர்கள் செய்வது தான் உண்மையான வழிபாடு என்று கருதுகின்றனர். ஆக இந்தப் போலிப் பூசைக்காரர்கள் இறைவனையும் ஏமாற்று கிறார்கள். தம் காலத்துடன் வாழும் மக்களையும் ஏமாற்றுகிறார்கள். அவர்கள் உள்ளேயுள்ள இறைவன் அவர்களைக் கண்டு சிரிக்கின்றான். அந்தோ பரிதாபம், அந்தோ மக்கள் ஏமாறுகின்றனர்.

திருவாசகம் சில சிந்தனைகள் 4 பக்கம் 436 - 437 எனவே தெய்வீகம் நிறைந்த திருவாசகத்தைப் பொருளுணர்ந்து படிப்பவர் கள் தெரிந்தவர்கள். சைவ நெறியின் கருது கோளை உணர்ந்து புனித சைவ சமயிகளாய் வாழ்தல் பயன்தரும். நம் ஆளுமைகளைப் பேணி உயர்ந்த ஆன்மீகம் மேற்கொள்வோமாக ஏமாறோம் - ஏமாற்றோம்.

கோள்நிலா வாளி அஞ்சேன்.
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீள்நிலா அணியினானை
நினைந்து நைந்து உருகி நெக்கு
வாள்நிலாம் கண்கள் சோர
வாழ்த்தி நின்று ஏத்தமாட்டா
ஆண் அலாத வரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

அச்சப்பத்து 10

**பயன்படுத்திய முக்கிய ஏடுகள் :-**

திருக்குறள் ~ சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம்
திருவாசகம் சில சிந்தனைகள் ~ 5 பாகங்கள் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தர் கங்கை புத்தக நிலையம்
திருவாசகம் ~ சுவாமி சித்பவானந்தர் உரை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம்
பாரதியார் பாடல் ~ டாக்டர் சுப்பு ரெட்டியார் பதிப்பு.

**கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு** 554

முறைதவறிக் கொடுங்கோலனாகி ஆராயாமல் எதையும் செய்யும் அரசன், தன் செல்வத்தையும் தன் குடிகளையும் ஒரு சேர இழப்பான்.

சென்ற இதழின் தொடர்ச்சி.....

# சாதுக்கள் தரிசனம்

சைவப்புலவர் வ. செல்லையா

நம் நாட்டுச் சித்தசிரோமணி ஒருவர். அவர்தான் மகாசாதுவாச்சே. யோகசுவாமிகள் ஒருமுறை மலையகத் தேயிலைத் தோட்டம் ஒன்றுக்குச் செல்கிறார். அங்கு நடந்துகொண்டிருக்கும் சம்பவமொன்றைத் தெய்வீக உணர்வினால் தெரிந்துகொண்டே அங்கு செல்கிறார். தன் பக்தன் ஒருவன் அத்தோட்டத்தின் உத்தியோகத்தர். மனைவி, மக்களெல்லாம் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அவர் ஒரு வேலைக் காரனுடன் பங்களாவில் இருக்கிறார். அங்குசென்ற சுவாமியார் உரியவரை அழைத்தார். அக்குரலைக் கேட்ட வேலைக்காரன் வெளியே ஓடிவந்து ஐயாவுக்குச் சுகமில்லை, இரண்டு மூன்று நாளாய்ப் படுத்தபடியே இருக்கிறார் என்றான். அவர் உள்ளே சென்று அவ்வன்பரைப் பார்த்தார். தரிசனம் கிடைத்தது. உடலை அசைக்க முடியாத காய்ச்சல். அவர் மேனியில் சுவாமியாரின் திருக்கரங்கள் தோய்ந்தன, எழுந்திருந்தார். ஓ! பெரிய காய்ச்சல். பையனிடம் ஒரு பேப்பரும் பென்சிலும் கொண்டுவரும்படி கூறினார். அது வந்ததும் குடிநீர் வைக்கும் மருந்துச்சரக்குகளை எழுதினார். அதனுடன் பானையும் மூடியும் சேர்த்தெழுதினார். சரி வாங்கி வருகிறேன் என்று எழும்பினார், புறப்பட்டார். நோயாளி, சுவாமி பையனை அனுப்புங்கோ! பணம் என்றார். அதெல்லாம் பின், என்று கூறிக்கொண்டு சென்றார். அனைத்தும் வாங்கிவந்தார். குடிநீர் தயாரானது. அதற்கிடையில் தேங்காய் சிரட்டையொன்றை எடுத்துக் கறளைப் போக்கிப் பின் புறத்தைச் செருக்கிக் கழுவி ஆயத்தம் செய்தார். குடிநீர் ஆயத்தம், எழும்பலாம் என்றார் சுவாமியார். நோயாளியும் படுக்கையை விட்டெழும்பினார். ஒரு சிரட்டை குடிநீரை வார்த்து நோயாளியிடம் நீட்டினார். அவரிடம் கொடாது அதனைத் தானே குடித்துவிட்டார் சுவாமியார். மறுபடியும் ஒரு சிரட்டை குடிநீரை வார்த்து அவரிடம் நீட்டிவிட்டு அப்படியே எறிந்துவிட்டார். நோயாளி குடிநீரைப் பார்த்தாரே தவிர அதனைக் குடிக்கவில்லை. குடிநீர்ப் பானையையும் அப்படியே எடுத்து வீசிவிட்டு, எல்லாம் சரி, நோயும் குணமாகிவிட்டது, நாளைக்குப் பத்தியம் போட்டுச் சாப்பிடு, நான் போய்விட்டு வருகிறேன் என்று கூறிவிட்டுச் சுவாமியாரும் அகன்றுவிட்டார். முன்னர் சேயின் நோய்க்குத் தாயே மருந்து உண்டு மாற்றும் சம்பவங்கள் நேரிலும், பாடல்களின் மூலமும் கண்டதுண்டு. அதற்கு ஓர் நியாயமும் இருந்ததுண்டு. அப்படி நிகழ்வது இன்றில்லை. காரணம் சேய்க்குத் தாய் பாலூட்டுவது இக்கால வழக்கில் இல்லை. ஆயின் சுவாமியின் நிகழ்வு இறைவனின் எடுத்துச் சுமத்தலின்பாற்பட்டது. இதனை நம்பலாமா? அதுதான் இந்த நூற்றாண்டுச் சம்பவமாச்சே. நிகழ்கால நிகழ்வு இதனைத்தான் கண்டும் கேட்டுமுள்ளவர் இன்னும் இருக்கிறார்களே. இதுதான் சாதுக்கள் தரிசனமும் அவர் காட்டிய கருணையுமாய் முடிந்தது. இன்னமுமா நம்பிக்கையில்லை. இதோ பின்வரும் பாடல் அடிகளைப் பாருங்கள்.

**'மந்திரமும் தேவும் மருந்துங் குருவருளும்**
**தந்திரமும் ஞானம் தரும்மறையும் - மெய்யென்னில்**

*The king, who, without reflecting (on its evil consequences), perverts justice, will lose at once both his wealth and his subjects.* *554*

**மெய்யாய் விளங்கிடுமே மேதினியில் என்றென்றும் பொய்யென்னிற் பொய்யாகிப் போம்.'** புரிகிறதா விடயம்.

மேலும் இவ்விடயம் தெளிவாக நாம் அறிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் பலன்களையும் செவ்வனே அனுபவிக்க முடியும். நாம் கருமஞ்சிதையாமல் கண்ணோட வேண்டும் என்று திருவள்ளுவருங் கூறுகிறார். அங்ஙன மானவர் களுக்கே எதனையும் உரிமையாக்கும் உரிமையும் உண்டெனெ்கிறார். சாதுக்கள் என்போரில், மெய்யடியார்கள், சித்தர்கள், பரமஞானிகள், தவசிரேஷ்டர்களாகிய ரிஷிகள், மாமுனிவர்கள் என்போர் அடங்குவர். இவர்களை வெளிப்படையாக அறிதல் அரிது. அவர்கள் என்றும் நம் கண்களால் தரிசிக்கக்கூடிய முறையில் அமைந்துவிடார்கள். மெய்யடியார்கள் ஆலய தரிசனம், தீர்த்த யாத்திரையென்று என்றும் எங்கும் அதே நோக்கில் சென்று கொண்டிருப்பர். இவ் வரிசையில் உள்ள மற்றவர் களும் காடுகளிலும், மலைகளிலும் தனிமை நாடித் தவ, விரத, நியம, நிஷ்டை கூடுதற் பொருட்டும், மனதை ஒருமுகப்படுத்தி இறை நாட்டத்தைப் பெறவும் மலைச்சாரல் குகைகளிலிருந்து தியானத்தை மேற்கொள்வர். சந்திரனைத் தரிசிக்கலாம், கங்கையில் சென்று படியலாம். ஒருவேளை, இவர்களைத் தரிசிப்பதென்பது மகாகஷ்டமே. ஒருவேளை நாம் மனங்கொண்டு தரிசிப்பவர்களும் ஆசாடபூதிகளானால் எம் பலனும் அதோகதிதான். நம் முயற்சியோடு திருவருள் கூடுமேல் யாவும் சாத்தியமாகும். இவை கைகூட நமக்குத் தெய்வமென்பதோர் சித்தம் உண்டாக வேண்டும். இச்சித்தம் நமக்கு உண்டாக எத்தனை பிறப்புக்களைக் கடந்துவர வேண்டு மென்று மாணிக்கவாசக சுவாமிகள் போற்றித் திருவக வலில் கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

எமது காலங்கனியும்போது நமக்கு அச்சித்தம் உண்டாகித் தரிசனம் கிட்டும். அப்போது பலன் நம் கைமேல் கிடைக்கும். எமக்கு எப்பலனும் இறைவன் நேரில் வந்து அருள் செய்வதில்லை. குரு மூலமே நிகழ்த்திவைப்பார். குருவின் பார்வையே தரிசனமுமாகும். இரும்பைக் காந்தங் கவருவது போல் குருவின் அருட்பார்வையில் நாம் அவர் வசமாவோம். இவற்றுக்கெல்லாம் நாம் செய்யும் நற் கன்மமே காரணமாக அமையும். இதற்கெல்லாம் நாம் மேற்கொள்ள வேண்டிய கைங்கரியங்கள் உண்டு. அவைதான் நல்லார் இணக்கம், இறைபூசையில் நேசம் என்று கூறப்படுவனவற்றுள் சிலவாகும்.

நாம் ஐயந்திரிபறத் தெளிந்து கொண்ட நல்லார், பெரியாரே சாதுக்கள். அவர்கள் தரிசனம் மிக மிக மேன்மையத் தரவல்லது. அதனை மாத்திரமல்ல அவர்கள் சொற்கேட்டல், அவர்க ளோடு பழ குதல், இணங்கியிருத்தல், அனைத்தும் நன்மையே தரும். அவர்களோடு நாம் இணைந்து வாழ்ந்தால் நாம் மனமாசு தீர்ந்து புனிதராகி விடுவோம். என்ன குறையுமிலோம் என்ற மன நிறைவு பெற்று உயர்ந்தும் விடுவோம். சாதுக்கள் வாழும் பிரதேசம் புனித பிரதேசமாகிவிடும். எவ்விடரும் அங்கு நேரப்போவதில்லை. "பஞ்சம்படை வந்தாலும் அஞ்சுவமோ" என்று கூறியவர் யோகசுவாமியார். அவர்கள் நம் மத்தியில் இன்றில்லாததே இவ்விடர் வரக் காரணமாகும். நல்லவர், பெரியவர், சாதுக்களெனக் கண்டு அவர் தரிசனம் பெறமுயலுவோம். பலன் பெறுவோம். நிறைவாகவும் நீதிநூற் பாடல் ஒன்றினைப் படித்துப் பலன் பெறுக.

**'நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ**
**டிணங்கி யிருப்பதுவும் நன்று.'**

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை 555

குடிகள் அரசனது கொடுங்கோல் ஆட்சியால் துன்பப்பட்டு, அதைப் பொறுக்க முடியாமல் அழுத கண்ணீரன்றோ அவ்வரசனின் ஆட்சியை அழிக்கும் படைக்கலம்?

சென்ற இதழின் தொடர்ச்சி.....

# சைவபூஷணம்
# தமிழ் விளக்கம்

கூர்ச்ச இலக்கணம் எவ்வாறெனில், முப்பத்தாறு தருப்பையாவது, இருபத்தைந்து தருப்பையாவது, பதினைந்து தருப்பையாவது, ஒன்பது தருப்பையாவது, ஏழு தருப்பையாவது, ஐந்து தருப்பையாவது, மூன்று தருப்பையாவது கொண்டு கூர்ச்சம் முடியலாம். நுனி நாலங்குலம். முடிச்சு இரண்டங்குலம். நீளம் பதினெட்டங்குலம். அடியிலுள்ள நாளம் பன்னிரண்டங்குலம். இவ்வாறு கூர்ச்ச இலக்கணம் அறிந்துகொள்க. ஒரு தருப்பையாகில் முடிச்சு வேண்டாம்.

தீக்ஷாங்கமும் பிரதிட்டாங்கமுமான வாஸ்து சாந்திசெய்யுமிடத்தில், தீக்ஷாமண்டபத்திற்குள் அக்கினி திக்கில் நெல்லு அல்லது அரிசியினாலாவது ஒழுமுழ அகலம் ஒருமுழ நீளம் மூன்றங் குல உயரத்தில் ஒருமண்டலமிட்டு மண்ணினால் வேதிகைசெய்து, முதலாவது விக்னேஸ்வரபூஜையும், பின்னர் கும்பபூஜை வர்த்தனிபூஜையுஞ்செய்து, அந்த வேதிகையில் மண்டுக பதக்கிரமமாக அறுபத்துநான்கு பதங்கீறி, அதில் கர்ணசூத்திரமிட்டு, நடுவிலுள்ள நான்கு பதத்தில் வாஸ்து பிரமாவைப் பூஜிக்க வேண்டும். அவருடைய தியானம் வருமாறு. நான்கு முகமும் நான்கு கையும் ஒருகையில் ஜபமாலையும் ஒருகையில் கெண்டியும் ஒருகை முழந்தாளிலும், ஒருகைபூமியில் ஊன்றியும் இருப்பதாகவும், சொர்ணநிறமாகவும், பத்மாசனத்திலிருப்பதாகவும், பூமிசயனத்தில் விருப்பமுள்ளவராயும், அப்பொழுதுதான் நினைப்புடனே எழுந்தவராயும் தியானிக்க வேண்டும்.

அவருக்குக் கிழக்காக ஆறுபதத்தில் மரீசி என்கிற தேவனையும், தெற்கே ஆறுபதத்தில் விவஸ்வானையும், மேற்கே ஆறு பதத்தில் மித்திரனையும், வடக்கே ஆறுபதத்தில் தராதரரையும் அர்ச்சிக்கவேண்டும். அக்கினிகோணமுதல் நான்கு கோணங்களிலும் ஒவ்வொரு கோணத்துக்கு இருவராக சவிதா, சாவித்திரன், இந்திரன், இந்திரஜயன், ருத்திரன், ருத்திரஜயன், ஆபன், ஆபவத்சன் என்னும் எண்மர்களையும் பூஜிக்க வேண்டும். சுற்றியுள்ள முப்பத்திரண்டு பதத்தில் ஈசானர் முதலாக முப்பத்திரண்டு தேவதைகளை அருச்சிக்க வேண்டும். அவர்களைச் சுற்றிக் கிழக்கு முதலாக நான்குதிக்கிலும் சரகீ, விதாரீ, பூதநா, பாபராக்ஷஸீ என்னும் நால்வர்களையும், அக்கினிகோணமுதல் நான்கு கோணங்களிலும் ஸ்கந்தர், அரியமா, ஜரும்ப, பலிபிஞ்சா என்னும் நால்வர்களையும் பூஜிக்க வேண்டும். ஆகவே, வாஸ்து பிரமாவுடன் மரீசி முதலான நால்வர், சவிதா முதலிய எண்மர், ஈசானர் முதலிய முப்பத்திரண்டுபெயர். சரகீ முதலிய நால்வர், ஸ்கந்தர் முதலிய நால்வர்களையுஞ்சேர்த்து ஐம்பத்துமூன்று தேவதைகளை அருச்சிக்கவேண்டுமென்க. அருச்சித்த இடத்திற்குக் கிழக்கில் தரையில் சுவாகாந்தமாக ஓமஞ்செய்ய வேண்டும். அதன் பின் பலிசமர்ப்பித்தல் ஈறாகவுள்ள கிரியைகளையுஞ்செய்து மண்டபத்திற்கு வெளியில் பரியக்கினி காரியமுஞ்செய்ய வேண்டும்.

சிவதீக்ஷை செய்யுங்காலத்து முதலாவது அங்குரார்ப்பணஞ்செய்து அதன் பின்னர் சிவதீக்ஷை செய்யவேண்டுமென்று காமிகாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அங்குரார்ப்பணஞ்செய்யு முறை வருமாறு. தீக்ஷைசெய்கிற தினத்திற்கு முன்னர் ஒன்பது நாளிலாவது ஐந்துநாளிலாவது மூன்று

*Will not the tears, shed by a people who can not endure the oppression which they suffer (from their king) become a file to waste away his wealth?* 555

நாளிலாவது முதநாளிலாவது அல்லது அந்த நாளிலாவது அங்குரார்ப்பணஞ் செய்ய வேண்டும். செய்யுமிடம் தீக்ஷாமண்டபத்துள் நிருதிதிக்கு அல்லது ஈசானதிக்காக இருத்தல் வேண்டும். அந்த இடத்தில் கலம் அரிசி முதற்கொண்டு எவ்வளவு கூடுமோ அவ்வளவு அரிசியாலாவது தானியங்களாலாவது ஆசிரியர் கைமுழத்தில் சதுரச்ரமாக ஒரு மண்டலமிட்டு அதில் தாமரைபோல் கீறி, அதனைப் பதினாறு கோஷ்டமாக்கி, அவற்றுள் நடுவிலுள்ள நான்கு கோஷ்டத்தை ஒன்றாக்கி, அதில் குமுதாசனங்கற்பித்து, அந்த ஆசனத்தில் சந்திரகும்பத்தையும், ஏனைய பன்னிரண்டு பதங்களிலும் பன்னிரண்டு பாலிகைகளை, தருப்பையினாலே மூடப்பட்டதும் வாரங்களையுடைய தாயும் மூன்றிழையினாலாவது ஐந்திழையினாலாவது ஏழிழையினாலாவது சுத்திவரக் கட்டப்பட்ட அரசிலை வாகையிலை வில்வபத்திரம் அருகு பசுமஞ்சள் தருப்பைப்புல்லு என்னும் இவைகளையுடையதாயும், எருமுட்டைப்பொடி சேர்த்து மணலை இதனோடு கட்டி முன் விதிப்படி கொண்டுவரப்பட்ட மண்ணினால் நிறைத்து வலமாகவைத்து, அந்தக் கும்பத்திலுள்ள ஜலத்தில் பாவிக்கத்தகுந்த மலர்ந்த தாமரையில் சந்திரனைப் பூரணமான அங்கத்தையுடையவராகவும், ஒருமுகமும் ஆம்பற் புஷ்பங்களாற் பிரகாசிக்கின்ற இருகைகளையும் உடையவராகவும், இரண்டுநேத்திரங்களையுடையராகவும், வெளுப்பாயும், ரோகிணி கீர்த்திகாதேவி என்னுமிவர்களுடன் கூடினராகவும், உலகஞ் சந்தோஷிப்பதற்குக் காரணமாகயிருக்கிறவராகவும் பாவித்து கும்பத்தில் அவரையும், பன்னிரண்டு பாலிகைகளில் பன்னிரண்டு சூரியர்களையும், ஆசனமூர்த்தி மூலமந்திரங்களால் ஆதாரசத்தியையும் பூசிக்கவேண்டும். பின்னர் ஒருசருவத்திலாவது ஒரு சட்டியிலாவது ஒருபாத்திரத்திலாவது இருநாழி ஜலம் நிரப்பி சாலிநெல்லிட்டு, எள்ளு, அவரைக்கொட்டை, துவரை, கடலை, கடுகு, பயறு, உளுந்து, கொள்ளு என்னும் எட்டுத்திரவியங்களாவது, அல்லது ஏழு அல்லது ஐந்து திரவியங்களாவது, அந்த நெல்லுடன் கூட்டிக்கலந்து, பாலினால் மந்திரத்துடன் மூன்று முறைகழுவி, இருதயமந்திரத்தாலருசித்து, ஏழுமுறை மந்திரித்து, மங்கலவாத்தியங்களுடன் இந்தப் பாலிகைகளுள் இந்த வித்துக்களையிட வேண்டும். இட்டபின் சந்திரகும்பத்திலுள்ள நீரினால் நனைக்க வேண்டும். சிவதீக்ஷை முடிந்து ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது நாளுக்குப்பின் அந்த அங்குரார்ப்பணங்களைப் பார்த்து சுபாசுப மறிந்து ஓமம் பண்ணவேண்டும். ஓமஞ் செய்தபின்னர் அங்குரங்களை நீரில் இடல்வேண்டும். இது சிவதீக்ஷா மங்களாங்குர விதியாகும்.

இரக்ஷா பந்தனவிதி கூறுகின்றார்.

சிவதீக்ஷை செய்யுங்காலத்து ஆசிரியர் சிஷ்யனுக்கு இரக்ஷாபந்தனம் செய்யுமுறை வருமாறு. ஆசிரியர் வடக்கு முகமாக இருந்துகொண்டு, சிக்ஷ்யனைக் கிழக்குமுகமாக நிற்கச்சொல்லி, வெண்கலமுதலான பாத்திரத்தில் நாலுநாழி அரிசியும் ஒரு பாக்கும் மூன்று வெள்ளை வெற்றிலையும் ஒரு தேங்காயும், ஒரு பாத்திரத்தில் விபூதியும் வைத்து, பொன்னாற்செய்த காப்பாவது, அல்லது மூன்றிழை ஐந்திழை முதலாக ஒற்றைபடும் இழையினால் முறுக்கப்பட்ட பொன்னிறமான பருத்தி நூலாற் செய்த காப்பாவது அந்தப் பாத்திரத்தில்வைத்து அபிமந்திரித்து, பின்னர் அந்தக் காப்புநூலையெடுத்து குருவானவர் வலது பெருவிரல் நீங்க ஏனைய விரல்களினால் அஸ்திரமந்திரத்தால் மும்முறை உருவி, சிஷ்யனுடைய வலதுகையில் சிவமந்திரத்தால் தரித்தல் வேண்டும்.

**மன்னார்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதுஇன்றேல்**
**மன்னாவாம் மன்னர்க்கு ஒளி** 556

அரசாக்குப் புகழ் நிலை பெறுதல் செங்கோலாட்சியினாலேயே ஆகும். செங்கோல் ஆட்சி இல்லாவிட்டால் அந்த அரசனுக்குப் புகழ் நிலை பெறாமல் போகும்.

# கந்தர் அலங்காரம்

ரா. பி. சேதுப்பிள்ளை

அலங்காரம் என்றால் எல்லோருக்கும் ஆனந்தம். அன்பின் வழியே நிகழும் அலங்காரம் சிறந்த இன்பம் பயக்கும். குழந்தையை அலங்கரித்து இன்புறுவாள் தாய். காதலியை அலங்கரித்து இன்பங்காண்பான் காதலன். கவிதையை அலங்கரித்துக் களிப்புறுவான் கவிஞன். ஆண்டவனை அலங்கரித்து ஆனந்தக் கூத்தாடு வான் பக்தன்.

இந்த வகையிலே கந்தப் பெருமானைச் செந்தமிழால்அலங்கரித்த கவிஞர் பலர். சங்கத் தமிழால் அப்பெருமானை அலங்கரித்தார் நக்கீரர். சந்தத் தமிழால் அலங்கரித்தார் அருணகிரியார். திருப்புகழ் என்னும் சந்தத் தமிழ்மாலை அணிந்த பின்னரும் ஆராத அன்பினால் அலங்காரம் ஒன்று செய்தார் அருணகிரியார். அதுவே கற்றவர் போற்றும் கந்தர் அலங்காரம்.

கந்தவேள் மகிழ்ந்து உறையும் மலைகளுள் ஒன்று, கொங்குநாட்டுத் திருச்செங்கோடு. அக்குறிஞ்சிப் பதியிலுள்ள முருகனை அலங்கரிக் கின்றார் அருணகிரியார்.

**'மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு**
**மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்**
**சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டு தொழ**
**நாலா யிரங்கண் படைத்தில னேஅந்த நான் முகனே'**

என்று பாடுகின்றார். "செங்கோட்டில் வாழும் முருகன் திருமாலின் மருகன். தில்லை மன்றிலே திருநடம் புரியும் சிவனார் திருமகன் : தேவர்க் கெல்லாம் மேலான தேவன் ஞானவடிவாய நாதன். அப் பெருமானைக் காணக் கண் ஆயிரம் இருந்தாலும் போதாவே! நாலாயிரம் கண்கள் வேண்டுமே! என்னைப் படைத்த நான்முகன் அவற்றைக் கொடுத்தானில்லையே" என்று அங்கலாய்க்கின்றார்.

என்றும் சீரிளமைத் திறம் குன்றாத அழகன் முருகப் பெருமான். அவன் அழகை இருகண்ணால் முகந்து பருக முடியாமல் அலமருகின்றார், அருணகிரியார். பேரழகைக் காணும் அன்பர்கள் இவ்வாறு பேதுறுவர் என்பதைக் கவியரசர்களாகிய கம்பரும் சேக்கிழாரும் நன்கு எடுத்துக்காட்டு கின்றார்கள். மிதிலை மாநகரின் வீதியில் மணமகனாகிய மணிவண்ணன் செல்கின்றான். வீதியின் இருமருங்கும் நிறைந்து நின்ற மாதர் அவன் கட்டழகை இருகண்ணால் முற்றும் காணமுடியாமல் தவிக்கின்றார். இப் பேரழகனைச் சீதைதான் எப்படிக் காணப்போகின்றாள் என்று சிந்தித்து நின்றார் சிலர். ஆயிரங்கண் இருந்தாலன்றி அஞ்சன மேனியானை முற்றும் அறியமுடியாது என்று கருதினாள் ஒரு மங்கை. "நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்" என்று அக் கருத்தைப் பாடுகின்றார் கம்பர். இது மிதிலைக் காட்சி.

மற்றொரு திருமணம் புத்தூரிலே நிகழ்ந்தது. மணமகன் சிவநேயச் செல்வராகிய சுந்தரர். அவர் பெருக்கேற்ற பேரழகுடையவர். மணக் கோலத்தில் வருகிறார். அவர் அழகைக் காண்பதற்கு, "ஆயிரங்கண் இருந்தாலும் போதா, எண்ணிலாத கண்கள் வேண்டும்" என்று கருதுகின்றார் இள நங்கையர். "கண்கள் எண்ணிலாத வேண்டும் இக் காளையைக் காண என்பார்" என்பது சேக்கிழார் கவிதை. எனவே, இனிய பொருளைக் காணக் கண்ணாயிரமும் அதற்கு மேலும் வேண்டுவது அழகிலுள்ள ஆசைக்கோர் அறிகுறியாகும். இந்த வகையில் செங்கோட்டில் உள்ள செம்மைசான்ற அழகனைக் கண்டு தொழுவதற்கு நான்முகனாகிய பிரமன் தன் ஒரு முகத்திற்கு ஓர் ஆயிரமாகக் கணக்கிட்டு அருணகிரியார். காணக் கண் போதாது என்றால் நாலாயிரங் கண்கள் தந்தானில்லையே என்று வருந்துகின்றார் போகட்டும். வாழ்த்த வாயுண்டு என்று அலங்கார மாகப் பாடுகின்றார்.

**'கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு**
**வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்**
**பொருமா வினைச்செற்ற போர்வே லனைக்கன்னிப் பூகமுடன்**

*Righteous government gives permanence to the fame of kings; without that their fame will have no endurance* 556

**தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே'**

என்பது ஓர் அலங்காரப் பாட்டு. சாதிப் பெயர்களாகிய கருமான், செம்மான் முதலியவற்றை முருகப் பெருமானோடு இணைத்துள்ள சதுரப்பாடு நம் உள்ளத்தைக் கவர்கின்றது. "கருமான் என்பவன் இரும்படிக்கும் கொல்லன் : அவனுக்கு எப்படி முருகன் மருகனாவான்?" என்று திகைக்கின்றோம். அப்போது, கற்ற கல்வி வந்து கைகொடுக்கின்றது. கருமான் மருகன் என்ற தொடர் மொழியைக் கருமால் மருகன் என்று பிரித்துவிட்டால் எல்லையற்ற இன்பம் பிறக்கும். "கருமால் என்பவன் திருமாலே. அவன் மருகனே முருகன்" என்று ஆனந்தம் அடைகின்றோம்.

இனி, கருமானை அடுத்துச் செம்மான் வருகின்றான். கருமானின் பின் செம்மான் வருவது அலங்காரந்தான் என்று எண்ணி அகமகிழ்கின்றோம். ஆயினும், செருப்புத் தைக்கும் செம்மானோடு சேயோனாகிய முருகனுக்கு என்ன உறவுண்டு? செம்மான் மகளைக் களவாடிய கள்வன் என்று சொன்னதன் கருத்தென்ன?

**'செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்'**

என்று மற்றோரிடத்தும் அருணகிரியார் பாடுகின்றாரே என்று சிந்திக்கும் பொழுது உண்மை புலனாகின்றது. செம்மையான மான் வயிற்றுப் பிறந்த வள்ளியைக் களவு முறையிற் கவர்ந்தவன் கந்தவேள் அன்றோ என்று உணர்ந்து இன்புறுகின்றோம்.

இன்னும் இரண்டு சாதிப் பெயர்கள் அப்பாட்டிலே அமைந்துள்ளன. மாகுலவன் என்பது ஒன்று. கைக்கோளன் என்பது மற்றொன்று. மலையிலே வேட்டையாடுபவன் மாகுலவன். அப்பெயர் எங்ஙனம் முருகனுக்குப் பொருந்தும் என்று எண்ணிப்பார்க்கின்ற பொழுது அருணகிரியார் அமைத்த அலங்காரம் நம் கருத்திலே இலங்குகின்றது. மலைப்புதரில் மறைந்து நின்று பறவை பிடிக்கும் மாகுலவனைப்போல் வேங்கை மரத்தில் மறைந்துநின்று வள்ளியின் கரம் பிடித்த முருகன் செயல் அச்சொல்லால் விளங்குகின்றது. மேலும் முருகன் பெரிய இடத்துப்பிள்ளை என்ற பொருளும் மாகுலவன் என்ற பதத்தால் பெறப்படுகின்றதன்றோ? இறைவன் திருமகனாய், திருமாலின் மருமகனாய், ஒருகைமுகன் தம்பியாய், உள்ள முருகன், மாகுலவன் (மா-சிறந்த, குலவன்-குலத்தைச் சேர்ந்தவன்.) என்பதில் ஐயமுண்டோ?

தொழில் செய்பவனைக் குறிக்கும். ஆயினும் சேவற் கைக்கோளன் என்று அருணகிரியார் சிறப்பித்தமையால் "சேவற் கொடியைக் கையிலேயுடைய முருகன்" என்று உணர்ந்து சிறந்த இன்பம் அடைகின்றோம். பிறப்பும், இறப்பும் அற்ற பெருமானைக் கருமானோடும், செம்மானோடும், மாகுலவனோடும், கைக்கோளனோடும், இணைத்துப்பாடிய அலங்காரப் பாட்டின் சுவை அன்பர் உள்ளத்தை அள்ளுவதாகும்.

இத்தகைய முருகப் பெருமானிடம் ஒரு வரம் வேண்டுகின்றார் அருணகிரியார்.

**'பாலே யனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றிஎன்றும்**
**மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்**
**காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்**
**மேலே துயில் கொள்ளும் மாலோன் மருகசெவ் வேலவனே'**

என்று பாடுகின்றார். "அரவணையிற் பள்ளி கொள்ளும் திருமால் மருகனே! தையலார் மையலிலே தாழ்ந்து, உய்யும் வகையறியாது உழல்கின்ற என்னை உன் திருவடியிற் சேர்த்து அருளவேண்டும்". என்று விண்ணப்பம் செய்கின்றார். இக்கவிகளிலே திருமாலுடைய அரவணையைக் குறிக்கும் மொழிகளில் அலங்காரம் இலங்குகின்றது. ஆயிரம் தலையுடைய அரவத்தைக் கணபணம் என்ற சொல்லாற் குறிக்கின்றார். அருணகிரியார். காலே மிக உண்டு. காலேயில்லாதது அக்கணபணம் என்கிறார். கால் உண்டு, கால் இல்லை. என்று கூறுவது முரண்பாடாகத் தோன்றுகின்றதே எனத் திகைக்கின்றோம். இன்னும் சிறிது ஊன்றிச் சிந்திக்கும் பொழுது அச்சொல்லின் நயம் புலனாகின்றது. கால் என்பதற்குக் காற்று என்ற பொருளும் உண்டு. பாதம் என்ற பொருளும் உண்டு. இவ்விரு வேறு பொருளிலும் கால் என்ற சொல் ஆளப்பட்டிருக்கின்றது. காற்றை அருந்தி, கால் இல்லாமையால் உடம்பால் நகர்ந்து செல்லும் இயல்புடைய பாம்பின் மீது பள்ளி கொள்ளும் திருமால் என்பது கருத்து.

இத்தகைய அலங்காரம், தமிழ்க் கவிதையின் சிறப்பு. அதன் சுவையறியும் செந்தமிழ்ச் செல்வத்தைக் கந்தப் பெருமான்அருளாற் பெற்ற அறிஞர் தம் பெருமை சொல்லவும் அரிதே.

---

**இனி வைக்கோளன் துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்**
**அளிஇன்மை வாழும் உயிர்க்கு** 557

மழை இன்மையால் உலகில் உள்ள உயிர்களுக்கு உண்டாகும் துன்பம் எத்தகையதோ, அத்தகையதே அரசனின் அருள் இல்லாமையினால் அவன் நாட்டில் வாழும் குடிகளுக்கு உண்டாகும் துன்பமும் ஆகும்.

# தந்தை தனயனுக்குத் தந்த தகவுரை

சிவ : சண்முகவடிவேல்

இங்கே தந்தை பிரமதேவர். தனயன் பிரமருடைய மைந்தனான தக்கன். தந்தை - தக்கன் எழுப்பிய வினாவிற்குக் கொடுத்த. தகவுரை - கனமான பதில் அல்லது உபதேசம் எனலாம்.

பிரமதேவர் முந்து ஒரு ஞான்று தமது சத்திய உலகத்தில் வீற்றிருந்தார். மலரயன் தமது கோயில் மண்டபத்தில் வீற்றிருந்த போது மேலான முனிவர்களும் தேவர்களும் புதல்வர்களும் புடையில் சூழ்ந்து போற்றினார்கள். அந்த வேளை பிரமதேவருடைய பத்துப்பிள்ளைகளில் தக்கன் என்பவன் பிரமதேவரிடத்தில் ஒரு வினாவைப் பின்வருமாறு வினாவினன்.

"தந்தையே! தேவர்களின் மகாதேவராகவும் ஞான குணத்திற்குத் தலைவராகவும் மும்மூர்த்திகளுள் முதல்வராகவும், முடிவில்லாத முழுமுதலாகவும் உயிர்கள் எங்கும் உயிர்க்குயிராகவும், உயிர்கள் விட்டு விலகாதவராகவும் இருக்கும் முழுமுதற் கடவுள் யாவர் ? அவர் இவர் தான் என்று தெளிய எடுத்து உரைக்க வேண்டும்" என்று அறிவால் மேம்பட்ட தக்கன் ஓர் ஐயப்பாட்டை எழுப்பினான்.

"மகனே! அன்று ஒரு நாள் நானும் திருமாலும் நாமே பரப்பிரமம் என்று நிச்சயிக்க மாறுபட்டுப் போர் புரிந்தோம். அப்போது நாம் கண்டு நடுக்குற நமக்கு நடுவனாக ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதி ஒன்று தோற்றியது. அந்தச் சோதியாகிய முழுமுதற் பரம்பொருள் சிவபெருமான். அச் சிவபெருமானே யாவர்க்கும் மேலாய முழுமுதற் பரம்பொருள் என்பதனை நீ உணர்வாயாக" என்று நான்முகன் எடுத்து நவின்றார்.

தந்தையின் தகவுரை தனயனுக்கு மேலும் ஐயப்பாட்டைத் தந்தது. தக்கன் தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

"பிரமபிதாவே! முத்தொழில்களில் பிரமவிட்டுணுக்களாகிய நீங்கள் படைத்தல் காத்தல் தொழிலைப் புரிகின்றீர்கள். உங்களுக்கு இல்லாத தலைமை அழித்தல் தொழிலை இயற்றுகின்ற ஈசன் தமக்கு வந்த காரணம் யாதோ? என் மன மயக்கம் மாற உரையுங்கள்."

தற்புகழ் மிக்க தக்கனுடைய புத்தி மயக்கம் போக்குவதற்குப் பிரமதேவர் புகலுவார்.

"மைந்த" பிரம விட்டுணுக்களாகிய எங்களையும் இந்திரன் முதலாகிய தேவர்களையும் ஏனைய உயிர் இனங்களையும் சங்கார காலத்தில் சங்கரித்தருளுபவர் உருத்திரராவார். சங்கார காலத்தில் உலகத்தை ஒடுக்கியவர் உருத்திர மூர்த்தி என்றால் படைப்புக் காலத்தில் அனைத்தையும் தோற்றுவிப்பவரும் அந்த சங்கரரே ஆவாரன்றோ?

*As is the world without rain, so live a people whose king is without kindness.* 557

சங்கரர் சங்கார காலத்தில் சங்கரித்தது போல மீண்டும் புனருற்பவ காலத்தில் அன்னையும் பிதாவுமாக அனைத்தையும் படைப்பார். உயிர்களுடைய பாவ புண்ணிய வினைகளுக்குப் பொருந்த தனு கரண புவன போகங்களையும் கொடுத்தருளுவார்.

"திருமாலையும் என்னையும் தமது திருப்புயங் களிலிருந்தும் தோற்றுவிப்பார். உலகப் படைப்பு காத்தல் பதவிகளை எமக்கு ஈவார். எங்கள் உயிர்க்குள் உயிராக நிற்பர். நிற்பதும் அல்லாமல் எம்மை அதிட்டித்துத் தாமே படைத்தல் காத்தல் தொழில் இயற்றுவர். சங்கரன் அருள் இன்றேல் எமது சாதனை எதுவும் நிகழாது".

"சிவபெருமான் எமது உயிரினுள் உயிராக நின்று இயற்றுவதோடு அமையாது, நமது சிந்தையினுள்ளும் மனத்துள்ளும், கண்களி னுள்ளும் கலந்து நிற்பர். நாம் முக்குண வயத்தால் முனுப்புக் கொள்கின்ற போது எம்மிடத்து வெளிப்பட்டு அருள்செய்து காப்பார்".

"சிவபெருமான் எள்ளில் கலந்த நெய் போலவும், அடிபடும் மணியினின்றும் எழும் ஓசை போலவும் தேன் துளிர்க்கும் மலரில் மணம் போலவும் இரத்தினத்தில் ஒளிரும் சோதி போலவும் உலகம் எங்கும் உள்ளும் புறம்புமாக வியாபித்து விளங்குவார்".

"பிள்ளாய் தக்க! சிவபெருமானே சிருட்டி ஆரம்ப காலத்தில் வேதம் முதலிய கலைகள் அனைத்தையும் ஓதினார். அப்பரம்பொருள் அக்கலைகளை எமக்கு ஓதினார். நாம் கேட்டு உணர்ந்தோம். இந்த உண்மைகளை அந்த வேதங்களில் நீ காண்பாய். நீயோ பரம்பொருளோடு எல்லாரையும் ஒன்றாகக் கருதினாய்.

இவ்வாறு பிதாமகன் பேதையாய் வினாவிய தக்கனுக்கு உபதேசம் செய்தார்.

உபதேசத்தை உணர இயலாத பிள்ளை பின்னரும் தந்தையை வினாவுகின்றான்.

"முழுமுதற் கடவுளாகிய; சிவபெருமான் ஓதிய; வேதம் உயிர்களையும் பஞ்சபூதங்களையும் யாவரையும் எவரையும் பிரம்மம் பிரம்மம் என்று ஆங்காங்கு எடுத்து இயம்புகிறது. அது என்ன தந்தையே! என் நெஞ்சம் பரப் பிரம உறுதி பெறாது கவல்கின்றது. விரைவாக எனது ஐயத்தைத் தீர்த்து வைக்க வேண்டும். என்றான் தக்கன்.

"மைந்தா! எவராலும் உணர்தற்கரிய வேதக் கருத்தின் இயல்பை இயம்புவேன். கேட்பாயாக! முடிவில்லாத முதல்வராகிய சிவபெருமானை வேதங்கள் பரப்பிரம்மம் என்று அழைப்பது உண்மை.! ஏனைய எவரையும் எவற்றையும் பிரம்மம் என்று உரைப்பது உண்மை அல்ல. இது உபசார வழக்காகும்.

எப்பொருளாக இருப்பினும் அப்பொருளை யாவர் வணங்கினாலும் அவ்வணக்கம் மூன்று திருக்கண்களுடைய மூலப்பரம் பொருளைச் சென்று சேரும். அது போலப் பழமையான வேதங்கள் விளம்பும் பெரும் புகழ் அனைத்தும் நதிகள் யாவும் கடலிற் சென்று கலப்பது போலச் செம்பொருளின் திருவடியில் சென்றடையும்.

**இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா**
**மன்னவன் கோல்கீழ்ப் படின்** 558

முறை செய்யாத (தவறிய) அரசனின் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் வாழ்ந்தால், இன்பம் தரவேண்டிய செல்வ நிலை, துன்பந்தரும் இயல்புள்ள வறுமையை விடத் துன்பமானது.

"மகனே ! மேலுங் கேட்பாய். வேத சாகைகள் அனைத்தும் எடுத்து இயம்பும் ஆணை இதுவாகும். அனைத்தையும் படைத்தும் காத்தும் ஒடுக்கியும் மீண்டும் தோற்றுவிப்பவனும் பக்குவான் மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்து ஆட்கொள்ளும் ஆண்டானும் அடி முடி இல்லாதவனும் சிவபெருமான் என்றும் வேத சாகைகள் சாற்றும்".

"பரமபிதாவும் ஆறுகுணங்களாலும், அருவம், உருவம், அருவுருவம் ஆகின்ற சுத்தனும் கற்பனை கடந்த சோதியும், எங்கும் வியாபித்திருக்கும் சித்துப் பொருளும், அநாதியும் வியாபித்திருக்கும் சித்துப் பொருளும், மகாதேவும் அழிவில்லா அரும் பொருளும், உயிருக்குயிராய் உள்ளே நிருத்தற் செய்பவனும் சிவபெருமானே என்றும் வேத சாகைகள் சான்றுரைக்கும்.

"மூவுலகிலும் முளைத்திடும் பொருளை எல்லாம் படைத்து அநுக்கிரகிக்கும் திரயம்பகன் என்னும் நாமத்தை உடையவனும் அனைத்திற்கும் சாட்சியாவானும் அழிவற்றவனும் மேலானவனும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்ந்தவனும் சிவபெருமான் என்னும் வேத சாகைகள்".

"பெருமையிற் பெரியவனும் ஏகன் தானும் அளவிடற்கரிய குணத்தினானும் பங்கையற் துறைவோனும் பாம்பணையானும் பார்த்தற் கரியவனும் பெண் ஆண் அலி என்னும் தன்மை இல்லாதவனும் வேண்டுவார் வேண்டுவதை ஈவோன் தானும் சிவபெருமான் என்று இயம்பும்".

"பிரமதேவர் முதலாக நிலைபெற்ற பெரிய உயிர் கூட்டங்களுக்குப் பதியாக அருள் பாலிக்கின்ற பழமையாகிய பசுபதியும், பிரமனாதி யோருக்கு மேலானவன் என்று அனைவரையும் அறியுமாறு பிரமாதியர் இறந்து வெந்து போன அவருடைய சாம்பரும் என்பும் தரிப்பவனும் சிவபெருமானே என்று எடுத்து ஏத்தும்.

"உடம்பிற் புகும் எவரையும் தமது சிறந்த குணத்துள்ளே ஒடுக்கித் தாமே யாவருக்கும் புகலிடமாகி அவர்களுடைய மாயா குணங்களுக்குள்ளே தான் கலத்தல் இல்லாத வனும் இத்தன்மையன் இந்நிறத்தன் இவ்வண்ணத் தவன் என்று என்னால் உரைத்தற்கரிய தெய்வமும் சிவபெருமானே என்றும் வேத சாகைகள் ஓதா நிற்கும்".

"அன்றியும் மைந்த ஒன்று கேள்! செம்மேனி அம்மானாராகிய சிவபெருமானே வேண்டினார்க்கு முத்தியை வழங்க வல்லான் என்றும் வேதம் முழங்கும் என்றால் சிவபெருமான் அல்லால் முழுமுதற் கடவுள் யாவராவார்?".

"பரம் பொருளாகிய செம்பொருளாம் சிவபெருமானை உணரும் உணர்ச்சி இல்லாமல் அனைத்து உயிர் வர்க்கமும் அனாதியே பந்தித்த துன்பத்திற்கு முடிவு கண்டு வீடுபேறு அடைவோம் என்னும் எண்ணம். உருவம் இல்லாத விசும்பின் தோலை உரித்து உடுப்பதற்கு ஒப்பாகும் என்று பெருமை மிக்க வேதம் உரைக்கும் என்னில் சிவபொருள் மேலாம் பரம்பொருள் என்றற்குப் பிறிது ஓர் சான்றும் வேண்டுமோ?".

"நீலமேனி வண்ணமாகிய கண்ணனை என்னைப் பின்னை இந்திரன் முதலிய தேவர்கள் யாவரையும் புகழ்ந்து உரைக்கின்ற வேதம்

***Property gives more sorrow than poverty, to those who live under the sceptre of a king without justice.*** ***558***

சிவபெருமானைத் துதி செய்தது போல ஒரு வார்த்தை வழங்கிய துண்டோ? எம்போல்வாரைப் புகழ்ந்துரைத்த துண்டானால் அது உபசாரம். அவ்வுண்மையைப் பேருலகம் அறியுமாற்றால் தொடக்கத்திலும் எம்மை விலக்கிற்று. முடிவிலும் எம்மை விளம்பாது ஒழிந்தது".

"நான்கு வேதங்களில் ஒப்பில்லாத பாதி வேதம் கங்கை வேணியராகிய கண்ணுதல் கடவுளைக் கழறும், மிகுதிப் பாதி வேதந்தான் திருமாலைப் பற்றியும் என்னைப் பற்றியும் ஏனைய தேவர்களைப் பற்றியும் நிலம் நீர் முதலிய பூதங்களைப் பற்றியும் பகரும். தக்கோய்! இவ்வாற்றால் சிவபரம் பொருளின் அதிகரித்து நிற்கும் வேத வாக்கியத்தின் உண்மையை நன்கு உணரக்கடவாய்".

"சிவபெருமான் முழுமுதற் கடவுள். அவர் பதிப்பொருள். மும்மல பாசத்தால் கட்டுண்டு முயங்கும் பசுக்கள் நாம். வேதங்கள் விளம்பும் இவ்வுண்மையை நீ அறிந்து தெளிய விரும்பினால் நான் ஒன்று நவில்வன். நாம் எம் பதவிகளைத் தடையின்றி நடாத்தும் பொருட்டு சிவபெரு மானுடைய ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த திருவடிகள் அருச்சித்துத் துதிக்கின்ற திருக் கோவில்கள் பலவற்றையும் தரிப்பாயாக என்று தனயனான தக்கனுக்குச் சிவபெருமானுடைய அதிமேலான நுட்பங்கள் எடுத்து நுவன்ற கமலாசனர் மேலுங் கட்டுரைக்கின்றார்.

"மைந்தா! சிவபெருமானுடைய திருவருளைப் பெறாமல் முத்தியில் நுழைந்தவர் இல்லை. சிவபெருமானுடைய அருள் இல்லாமல் வாழுகின்ற அமரர் ஒருவர் இல்லை. சிவபெருமானுடைய அருள் அடையப் பெற்றால் அடைதற்கு அரிய பொருள் ஒன்று இல்லை. இவை வேதம் காட்டும் உண்மை. ஆணை இட்டு அறைகின்றேன்- சிவபெருமான் அல்லாமல் முதல்வர் ஒருவர் இல்லை. சிவபெருமானைச் சரணாகதி அடைவாய்.

பிரமதேவருடைய உபதேசத்தைத் தக்கன் பொறுமையோடு கேட்டான். ஆழமாகச் சிந்தித்தான். தந்தையின் உபதேசத்தை நன்கு உணர்ந்தான். சிவபெருமான் முழுமுதற் பராபரம் பொருள் என்று தேர்ந்து கொண்டான்.

தக்கன் பிரமதேவர் முதலானவர்களிலும் பார்க்கக் கடுந்தவஞ் செய்யக் கருதினான். சிவபெருமானிடத்தில் முடிவில்லாத வரங்களைப் பெறுவேன் என்று மனத்தில் முன்னின்றான்.

தக்கனின் தலையாய தவத்தைக் கண்டு சிவபெருமான் தயை புரிந்தார். பொன் மலை வெள்ளிமலை மீது வந்தாற் போல இடபத்தில் இருந்து உமாதேவியாருடன் வெளிநின்றார் விறலோன். தக்கன் வேண்டும் வரங்களை எல்லாம் தடையின்றி வழங்கினார் வான் பொருள்.

தக்கன் வரங்களைப் பெற்றும் என்ன பயன்? தருக்கடைந்தான் தக்கன், ஆணவத்தால் பீடிக்கப்பட்டான். தற்பெருமை கொண்டான். தவத்தின் பயனாகச் சிவத்தைச் சாராமல் அவமாகித் தன் தகவு இழந்தான். தருமவழியினின் றும் தவறியதால் தக்கன் தகுதியற்ற தலையினைப் பெற்றான். தருக்கினை இழந்து தன் தகவின்மைக்கு வருந்திப் பல்லாண்டு சிவபூசை புரிந்தான். கண்ணுதலின் கருணை பெற்று கணநாதன் ஆனான் தக்கன்.

**முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல்** 559

மன்னவன் முறை தவறி ஆட்சி செய்வானானால்,
அவன் நாட்டில் பருவமழை தவறி, வானம் பொழியாது.

# சிவாலய தரிசனம்

சு. சிவபாதசுந்தரம்

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரஞ் தரித்துக் கொண்டு கோயிலுக்குப் போதல் வேண்டும். கோயிலுக்குக் கிட்டப் போனவுடனே கால்களைக் கழுவிக் கோபுரத்தைக் கும்பிட்டுக் கொண்டு திருநந்திதேவரை வணங்கி, "பகவானே, அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசிப்பதற்கு அனுமதி தந்தருளும்" என்று வேண்டிக் கொண்டு உள்ளே போதல் வேண்டும். பின்பு பலிபீடத்தையும் நந்திதேவரையும் கும்பிட வேண்டும். அதன்பின் பிள்ளையாரையும், சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையும், நடேசர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், வைரவர், வீரபத்திரர், சுப்ரமணியர் முதலிய மூர்த்திகளையும், சமயகுரவரையும் தரிசனம் செய்தல் வேண்டும்.

பிள்ளையாரைத் தரிசனஞ் செய்யும் பொழுது, முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டிக் கும்பிடல் வேண்டும். கும்பிடும் போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிற்றல் வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று தரத்துக்குக் குறையாமற் செய்தல் வேண்டும். தலை, கைகள், செவிகள், புயங்கள், மேவாய் என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம். தலை, கைகள், முழங்கால்கள் என்னும் ஐந்து அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். பின்பு எழுந்து இரண்டு கைகளையுங் குவித்துத் தியானஞ் செய்து கொண்டு மெல்ல மெல்லக் கோயிலை வலமாகச் சுற்றிவந்து பின்பும் சந்நிதானத்திலே நமஸ்காரஞ் செய்தல் வேண்டும்: பிரதிக்ஷிணஞ் செய்த பின்பு, சண்டேசுவரர் சந்நிதியடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து வணங்கல் வேண்டும். பின்பு சுவாமி சந்நிதானத்தில் வந்து மீண்டும் நமஸ்காரஞ் செய்து வீட்டுக்குப் போதல் வேண்டும். ஒவ்வொரு நாளுங் கோயிலுக்குப் போவது உத்தமம். ஒவ்வொருநாளும் போக இயலாதவர் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப் பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, விநாயக சட்டி, கந்தசட்டி, சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் சுவாமி தரிசனஞ் செய்தல் வேண்டும்.

கோயிலுக்குப் போனால் வேடிக்கைகளை விரும்பாமற் சிவ வழிபாட்டிலேயே மனத்தைச் செலுத்தல் வேண்டும். இந்த ஊரிலே வருஷத்துக்கு இரண்டுமுறை பெரிய நீதிபதி விசாரணைக்கு வருகிறார். அங்கே நாம் நிற்கும்பொழுது எவ்வளவு அமைதியாயும் பயபக்தியாயும் நிற்கின்றோம்; இருமல் வந்தாலும் அடக்கிவிடுகின்றோம். நீதிபதிக்கு முன்னே இவ்வளவு பயபக்தியாய் நின்றால் நமது சக்கரவர்த்திக்கு முன் எப்படி நிற்போம்? அப்படியானால் கடவுள் சந்நிதானத்திலே நாம் எப்படி நிற்க வேண்டும். நமது சக்கரவர்த்திக்கு இந்தப் பூமியிலே ஒரு சிறு பகுதிதானுண்டு; இந்தப் பூமி முழுவதும் அவருக்கிருந்தால் அவர் எவ்வளவு பெரியவராயிருப்பார். இந்தப் பூமியிலும் சூரியன் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரிது. சூரியனிலும் ஆயிரம் மடங்கு பெரிய நட்சத்திரங்கள் கோடானு கோடி உள்ளன. இவை எல்லாவற்றையும் உண்டாக்கிய சிவபெருமான் எவ்வளவு பெரியவர் என்பதை யோசித்துப் பாருங்கள்! உண்டாக்கியதும் எப்படி? உண்டாக்க வேண்டுமென்று அவர் நினைக்கவுமில்லை; அவர் வாளா இருக்க அவரது சக்தியால் எல்லாம் உண்டாகின்றன.

*If the king acts contrary to justice, rain will become unseasonable, and the heavens will withhold their showers.* *559*

இப்படியானால் சிவபெருமானுடைய பெருமை எவ்வளவு? பெரிய நீதிபதிக்கு முன்னே நிற்கும்போது இருமல் வந்தாலும் அடக்கிக் கொண்டு பயபக்தியாய் நிற்றல் வேண்டுமானால், சிவபெருமானுடைய சந்நிதானத்திலே நாம் எவ்வளவு பயபக்தியாய் நிற்றல் வேண்டும்? கோயிலுக்குப் போகிறவர்கள் இயன்ற அளவு தொண்டு செய்வது உத்தமம். குடை பிடித்தல், தீவர்த்தி பிடித்தல், வாகனங்காவுதல், பூந்தோட்டத் துக்கு நீர்பாய்ச்சுதல், கூட்டுதல், மெழுகுதல் முதலிய திருத்தொண்டுகளில் ஒன்றாவது செய்தல் வேண்டும்.

சில கோயில்களிலே நிகழும் திருவிழாக்களிலே மூன்று பெருங் கொடும் பாதகங்கள் செய்யப்படு கின்றன; கடவுளிடத்து அன்புடையவர்கள் அப்படியான விழாக்கள் நடைபெறும் போது அந்த இடங்களுக்குப் போகலாகாது; போகிறவர் கள் அந்தப் பாதகங்களுக்கு உடன்பட்டவராய்த் தாமும் பாதகர்களாவார்கள்.

அவற்றுள் மிகக் கொடிய பாதகம் சுவாமியுடைய திருமேனியிலே பொய்க் கரங்களை யும் பொய்க் கால்களையும் கட்டுதலாம். இவை களைச் சுவாமியின் மேலே கயிற்றினால் வரிந்து இறுக்கிக் கட்டுதல் எவ்வளவு கொடிய சிவத் துரோகமாகும். அதைச் சுவாமியென்று நினைப்ப வர்கள் இந்தக் கொடிய வேலைகளைச் செய்வார் களா? இப்படியான பொய்க் கைகளையும் கால் களையும் எங்களுடைய உடம்பிலே யாராயினும் கட்டுவதற்கு வந்தால் நாங்கள் விடுவோமா? சுவாமியை ஒரு பாவைப் பிள்ளையென்று நினைப்பவர் மாத்திரம் அஞ்சாமல் இப்படியான செயல்களைச் செய்வார். சுவாமியை பாவைப் பிள்ளையாக நினைத்தல் சுவாமியை எவ்வளவு நிந்திப்பதாக முடியும்?

இரண்டாவதான கொடிய பாதகம் யாதெனில், கோயிலிலே பெண்களைக் கொண்டு நடனம் செய்வித்தலாம். கோயிலுக்குப் போகிறவர்கள் கடவுளை வணங்குதலைக் கைவிட்டு இவர் களுடைய நடனத்தைப் பார்ப்பார்களாயின், அவர்கள் இந்தப் பெண்ணைக் கடவுளிலும் மேலாக மதிப்பவர்களாகின்றனர். இப்படியாகக் கடவுளை அவமதித்தல் பெருஞ் சிவத்து ரோகமாகும்.

மூன்றாவதான சிவத்துரோகம் அர்த்த யாம காலத்தின்பின் பூசை திருவிழா முதலியவற்றை நடத்துதலும் தரிசித்தலுமாம். சில இடங்களிலே சூரியோதயத்தின் பின்னரே விழா முடிவடை கின்றது. இது சிவாகம விதிக்கு முழு மாறான செய்கை. கடவுளிடத்து அன்புடையவர்கள் அர்த்தயாமகாலம் சென்றவுடனே கோயிலை விட்டுப் புறப்படுதல் வேண்டும். சிவராத்திரியில் மாத்திரம் நான்கு யாமங்களிலும் சுவாமி தரிசனம் செய்தல் தக்கதாம்.

இன்னுந் திருக்கோயிலிலே செய்யலாகாத குற்றங்கள்:
1. ஆசாரமில்லாது போதல் 2. கால்கழுவாது போதல் 3. எச்சில் உமிழ்தல் 4. மலசலங் கழித்தல் 5. மூக்குத்தூள் போடுதல் 6. மூக்குநீர் சிந்துதல் 7. வெற்றிலை பாக்கு உண்டல் 8. போசனபானம் பண்ணுதல் 9. ஆசனத்திருத்தல் 10. சயனித்தல் 11. காலை நீட்டிக்கொண்டிருத்தல் 12. மயிர் கோதி முடித்தல் 13. சூதாடல் 14. தலையிலே சீலை தரித்துக் கொள்ளுதல் 15. தோளிலே சீலை இட்டுக் கொள்ளுதல் 16. போர்த்துக் கொள்ளுதல் 17. சட்டையிட்டுக் கொள்ளுதல் 18. பாதரட்சையிட்டுக் கொள்ளுதல் 19. விக்கிரகத்தைத் தொடுதல் 20. நிருமாலியத் தைக் கடத்தல் 21. நிருமாலியத்தை மிதித்தல் 22. கொடித்தம்பம், பலிபீடம், இடபதேவர், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல் 23. வீண் வார்த்தை பேசுதல் 24. சிரித்தல் 25. சண்டையிடுதல் 26. விளையாடுதல் 27. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல் 28. ஓடி வலம்வருதல் 29. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல் 30. சிவபெருமானை முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் நின்று வணங்குதல் 31. திருவிளக்கு அவியக் கண்டும் தூண்டா தொழிதல் முதலியனவாம்.

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின்** 560

அரசன் தன் குடிகளையும் அவர்களுக்குப் பயன்படும் பிற உயிர்களையும் முறைப்படி காக்காவிட்டால், அவன் நாட்டுப் பசுக்களும் பால் குறையும். அறுவகைத் தொழில் செய்வோரும் தமக்கு உரிய நூல் கற்பதை விட்டு விடுவர்.

# புராணபடனம்

ஆறுமுகநாவலர்

புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும், அவைகளுக்குப் பொருள் சொல்லலும் கேட்டலும் சிறந்த புண்ணியங்களாம்.

புராணம் வாசித்துப் பொருள் சொல்லற்கு உரிய இடங்களாவன: திருக்கோயில், திருமடம், புண்ணிய தீர்த்தக்கரை, சமயாசாரமுடைய வருடைய கிருகம் முதலிய சுத்த ஸ்தானங்களாம். மற்றை விடயங்களிலே புராணம் படிக்கலாகாது.

புராணம் வாசித்துப் பொருள் சொல்லற்கு யோக்கியராவார், நான்கு வருணத்துள்ளும், இலக்கண விலக்கியங்களிலே வல்லவராய், நீதி நூல்களையும் சமய நூல்களையும் கற்றறிந்தவராய், தமிழ் வேதத்தை அத்தியயனம் பண்ணினவராய் நல்லொழுக்கத்திற் சிறந்தவராய் உள்ளவர். நல்லொழுக்கம் இல்லாதவரிடத்தே புராணங் கேட்டலாகாது.

ஸ்நானஞ் செய்து தோய்த் துலர்ந்த வஸ்திரந் தரித்து அநுட்டானம் முடித்துக் கொண்டே புராணம் படித்தல் பொருள் சொல்லல் கேட்டல் என்னும் இவைகளைச் செய்தல் வேண்டும். ஸ்நான முதலிய நியமங்கள் இல்லாமல் இவைகளைச் செய்யலாகாது.

புராணத் திருமுறையைப் பீடத்திலன்றித் தரையிலேனும், ஆசனத்திலேனும், படுக்கை யிலேனும், மடியிலேனும் வைக்கலாகாது; திருமுறைக் கயிறு கீழே விழலாகாது. முறை யென்பது புத்தகம்.

புராணத்தைச் சுபதினத்திலே தொடங்கிச் சுபதினத்திலே முடித்தல் வேண்டும். தொடங்குந் தினத்திலும் முடிக்குந் தினத்திலும் புராண மண்டபத்தைப் பட்டுமேற் கட்டி, பூமாலை, வாழை, கரும்பு, முதலியவைகளினால் அலங்கரித்தல் வேண்டும்.

நாடோறும் புராண மண்டபத்தைக் கோமயத் திலே மெழுகுவித்து, இடம் பண்ணி, அதன் மீது பீடத்தை வைத்து, அதன் மேலே பட்டுப் பரிவட்டம் விரித்து, அதன் மேலே புராணத் திருமுறையை வைத்து, சந்தனம், புஷ்பம், தூபம், தீபம் முதலியவைகளினாலே விதிப்படி பூசை செய்து, நமஸ்கரித்து, இருந்து கொண்டு, ஒருவர் வாசிக்க ஒருவர் பொருள் சொல்லல் வேண்டும். குணத்துக் கும் காலத்துக்கும் ஏற்ப வாசிக்கப்படும் இராகத்திற் றானே பொருள் சொல்லல் வேண்டும். வாசிப்பவர் திருமுறையின் பாகத்தை இரண்டு கையினாலும் பிடித்துக் கொண்டே வாசித்தல் வேண்டும். பொருள் சொல்பவர், இலக்கண வழுவில்லாத படிக்கும், கேட்பவர்கள் எல்லாருக்கும் எளிதில் விளங்கும் படிக்கும், சொல்லல் வேண்டும். படிக்கத் தொடங்கும் போதும், முடிக்கும் போதும் காப்புச் சொல்லல் வேண்டும். அப்பொழுது எல்லாரும் அஞ்சலி செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

புராணங் கேட்பவர் புராணத்திருமுறையை நமஸ்கரித்து, புராணம் படித்துப் பொருள் சொல்லு வோருக்கு ஆசனங்கொடுத்து நமஸ்காரஞ் செய்து, தம்முடையசுற்றத்தாரோடும் நண்பரோடும் இருந்து கொண்டு, சிரத்தையுடன் கேட்டல் வேண்டும்.

புராணம் படிக்குஞ் சபையிலே உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்தல், நித்திரை செய்தல், சிரித்தல், பிறவார்த்தைகளைப் பேசுதல், புராண சரித்திரத் தைப் பொய்யென்றல், வெற்றிலை பாக்குண்ணு தல், தலையிலே வேட்டி கட்டிக்கொள்ளுதல், உடம்பு போர்த்துக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்லுதல், புராணம் வாசித்துப் பொருள் சொல்வோரை நன்கு மதியாது அவமதி செய்தல் முதலிய பாவங்களைச் செய்தோர் நரகத்திலே நெடுங்காலந் தண்டிக்கப்பட்டு, பின்பு இழிந்த பிறப்பை அடைந்து வருந்துவார்கள்.

புராணங் கேட்பவர் ஆதி தொடங்கி ஈறுவரை யும் தவறாமல் நியமத்தோடு கேட்டல் வேண்டும். புராணம் முற்றுப்பெற்ற தினத்திலே புராணத் திருமுறைக்கு விசேஷ பூசை செய்வித்து, புராணம் வாசித்தவருக்கும், பொருள் சொன்னவருக்கும், கடவுளுடைய அடியார்களுக்கும், குருடர் முடவர் முதலானவர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் அன்னங் கொடுத்து, புராணம் வாசித்தவருக்கும் பொருள் சொன்னவருக்கும் தம்மால் இயன்ற பொருள்கள் வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

எல்லாருங் கேட்டு உய்யும் பொருட்டுத் திருக்கோயில்களிலே யோக்கியர்களைக் கொண்டு புராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுவித்தல் மிக மேலாகிய புண்ணியம்.

***If the guardian (of the country) neglect to guard it, the produce of the cows will fall, and the men of six duties will forget their saered book. 560***

# ஸ்ரீகுண்டல விகுண்டலர்

## (புராணகதைப் பகுதி)

வண்ணை : பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா

கிருதயுகத்தில் நிடதநாட்டிலே ஏமகுண்டலன் எனப் பெயர்பெற்ற வணிகன் ஒருவன் இருந்தான். அவன் தனது குலத்தொழிலாகிய பயிர்ச்செய்கை, பசுக்காத்தல், வியாபாரம் என்பவற்றை நன்கு போற்றி வந்தான். அவற்றால் எட்டுக்கோடி பொன் வரையில் தேடிக் கொண்டான். அவன் ஒரு நாள் பின்வருமாறு சிந்திப்பானாயினான்: "யான் தேடிய பொருள்களும், அவற்றால் நான் அனுபவிக்கும் இன்பமும் விரைவில் அழிவனவேயாம். சிவபெருமான் ஒருவரே அழிவற்றவர். அவருடைய திருவடியைத் தரிசித்தவர்கள் பிறவித் துன்பம் நீங்கப்பெறுவர். அதனால் அவரைக் காணும் வழியாது? சிவபெருமானை அடைவதற்குச் சிறந்தவழி தான தருமஞ் செய்தலேயென்று சைவ சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே, எனது பொருள்களில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டு தான தருமஞ் செய்வேன்" என்றிவ்வாறு நிச்சயஞ் செய்து கொண்டு சிவபெருமானுக்கும் விஷ்ணுவுக்கும் தனித்தனியாக ஒவ்வோர் ஆலயம் அமைத்தான். ஆல் அரசு மா வேம்பு நாகை முதலிய மரங்களை வைத்து நல்ல சோலைகளை ஆக்கினான். பூசைக்குரிய பூமரங்களை வளர்த்தான். பல தண்ணீர்ப் பந்தர்களை நிறுவினான். ஏழைகளுக்கு அன்னமிடுதல், திருக்கோவில்கள், பிராமணர் முதலாயினாருக்குப் பாற்பசுக்களைக் கொடுத்தல், அநாதைகள் வசிப்பதற்கான குடியிருப்புக்களைக் கொடுத்தல், சுவர்ணதானஞ் செய்தல் என்பவற்றைக் கிரமமாக நடாத்தி வந்தான். தேவபூசையும் அதிதிபூசையும் முடித்தன்றி அவன் ஒருநாளும் உணவு கொள்வதில்லை.

நற்குண நற்செயல் வாய்ந்த அந்த வணிக னுக்கு ஸ்ரீகுண்டலன் விகுண்டலன் என இரு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் கிரமமாக வளர்ந்து தகுந்த பருவம் எய்தினர். தந்தை யானவன் குடும்பபாரத்தைத் தனயரிடம் ஒப்பு வித்தான். ஏமகுண்டலன் இடைவிடாத சிவத் தியானத்தினால் உலக இச்சையை ஒருவினான். அநாயாசமாக உடலை விட்டான். எம்பெருமானுடைய திருவடிநீழலில் பேரானந்தப் பெருவாழ்வடைந்தான். பிதாவுக்குச் செய்ய வேண்டிய தீக்கடன் நீர்க்கடன்களைப் பிள்ளைகள் கிரமமாகச் செய்து நிறைவேற்றினர்.

இளவணிகர் சிரமமில்லாமலே பெருஞ் செல்வத் துக்கு அதிபதிகளானார்கள். நடுச்சமுத்திரத்திலே திசையறியாது ஓடுகின்ற ஒருகப்பலைப் போல அந்தவாலிபர் இருவரும் பெருஞ் செல்வத்தின் மத்தியில் இருந்து கொண்டு செய்வதின்னதென அறியாராயினர். தாம் செல்வந்தர் என்ற இறுமாப்பு மெல்ல அவர்களிடம் வந்து சேர்ந்தது. தம்மைப் பெற்றவன் காட்டிவைத்த அறநெறியை அறவே மறந்தனர். மனஞ்சென்ற வழியெல்லாம் நடக்கத் தலைப்பட்டனர். தீயவர் கூட்டுறவு உண்டாயிற்று. மதுபானம், மாமிசபோசனம், விலைமாதர்முயக்கம் என்பன அவர்களின் பொருட் செலவுக்கு வாயில்காயின. திருமடந்தையும் அவர்களை விட்டு நீங்கினள். மிக்க ஏழைகளாயினர். ஊண் உடைக்கே வகையின்றித் திகைத்தனர். அதனால் திருட்டுத் தொழிலை மேற்கொண்டனர். அரசதண்டனைக்கு அஞ்சி வனவாசிகளாயினர். அவ்வாறு வேடரைப் போல வசித்து வருங் காலத்திலே, வினைவயத்தால் ஒருவன் வேங்கைப்புலிக்கு இரையானான். மற்றவன் அரவந்தீண்டியிறந்தான். யமதூதர்கள் இருவருடைய உயிர்களையும் யமதருமன் முன்னிலையிற் சேர்த்தனர். சித்திரகுப்தனை யமதருமராசா உசாவிக் கொண்டு, ஸ்ரீ குண்டலனை இரௌரவநரகத்துக்கும், விகுண்டலனைச் சுவர்க்கத்துக்கும் அனுப்பினான்.

அப்பொழுது விகுண்டலன் யமதருமராசாவைப் பார்த்து "பிரபுவே! ஒரு குலத்திலேயே பிறந்து, ஒரேதொழிலைச் செய்து ஒருநாளிலேயே இறக்க, அண்ணன் நரகத்துக்கும் அடியேன் சுவர்க்கத்துக்கும் செல்லும் காரணம் யாதெனக் கூறியருள வேண்டும்" என்றான். அதற்கு யமன், "அப்பா, விகுண்டலா! தாய் தந்தை மகன்தமையன் தம்பி முதலிய தொடர்பு, ஒரு மரத்தில் வந்து இருக்கும் பறவைகளின் கூட்டுறவு போன்றது

என்பதை அறிந்துகொள். அவரவர் செய்த வினைப்பயனை அவரவரே அனுபவித்தல் வேண்டும். ஆதலால், உனது முற்பிறவி வரலாற்றைக் கூறுவன் கேள். யமுனாநதிக் கரையிலே அரிமித்திரன் என்ற பெயருடைய ஓர் அந்தணன் ஓர் ஆச்சிரமத்தை அமைத்து அதில் வசித்து வந்தான். அவனுக்குச் சுவமித்திரன் என்னும் பெயருடைய ஒரு புத்திரன் இருந்தான். அவன் உனக்கு நண்பனாயிருந்தான். அது காரணமாக நீ ஒரு சமயம் இரண்டுமாத காலம் வரையில் அந்த ஆச்சிரமத்தில் வசிக்க நேர்ந்தது. அப்போது அந்த அறுபதுநாளும் தவறாமல் யமுனா நதியில் நீராடினாய். அப்புண்ணியமே உனக்கு நல்ல கதியை அளித்தது. முதலாம் மாதத்து ஸ்நானத்தினால் நீ அதுகாறுஞ் செய்த பாபமெல்லாம் அழிந்தன. இரண்டாம் மாதத்து ஸ்நானபலனால் உனக்குச் சுவர்க்கலோக வாழ்வு சித்தித்தது" என்றான். அவ்வரலாற்றைக் கேட்டு வியப்படைந்தான் விகுண்டலன். "ஐயா, எந்தச் செயலால் நரகம் சம்பவிக்கும்? எதனைச் செய்வதால் நற்கதி கிடைக்கும்? என்பதை அடியேனுக்கு வகைப்படுத்திக் கூறியருள வேண்டும்" என்று பின்னும் இரந்து கேட்டான்.

தருமராசா கூறுவார்:- "மனமொழி மெய்களால் ஒருவருக்குத் துன்பஞ் செய்தலாகாது. கொலையை விடக் கொடிய பாதகமில்லை. தம்முடைய உடலை வளர்ப்பதற்காக ஊனைப் பெற விரும்பிப் பிற உயிரைக் கொலை செய்பவர் கால சூத்திரமென்னும் நரகத்தையடைவர். அவர்களுக்கு நாயின் இறைச்சி உணவாகக் கொடுக்கப்படும். இரத்தமும் சீழும் பானமாகக் கொடுக்கப்படும். அவர் பின்னும் அங்கவீனராய்ப் பிறப்பர். ஐம்புலன்களை அடக்குதல், அக்கினியில் ஆகுதி செய்தல், கடவுட்பூசை, அடியார் பூசை செய்தல், உறுப்பிழந்தவர்களுக்கு உதவி புரிதல், சேற்றில் அகப்பட்ட பசுவைக் கரையேற்றல், புலரிக்காலையிற் புனலாடல், உண்மையுரைத்தல், எல்லாரோடும் எப்போதும் அமைதியாகவும் முகமலர்வோடும் பேசுதல் என்பன புண்ணியங் களாகும். அதிகாலையிற் குளித்தலின்றி உணவு கொள்ளுதல் மலத்தை உண்பதை ஒக்கும். பிராத ஸ்நானத்தினால் தீயகனாக் காண்டல் என்னுந் துன்பம் நீங்கும். எள்ளைத் தானம் செய்பவருக்கு நரகத்துன்பமில்லை. பிறர் வெறுப்பனவற்றையே பேசுபவர் மீளாநரகத்துக் காளாவர். கங்கையிற் புனல் மூழ்குதலுக்குச் சமமான புண்ணியம் வேறில்லை. ஒவ்வொருநாளும் பதினாறுமுறை பிராணாயாமஞ் செய்துவரின் பிரமகத்தி முதலாய பாவங்கள் நீங்கும். பிறர் பொருளைத் துரும்பாகவும் பிறர்மனைவியரைத் தாய்மாராகவும் நினைத்து நடப்பவனுக்கு ஒரு கேடும் வராது. கோபத்தை அறிவென்னு முரனால் அடக்கி வெற்றிகொண்ட வன் இம்மையிலேயே சுவர்க்க இன்பம் பெறுவான். தாய் தந்தையருக்குத் தொண்டு செய்தலைவிடச் சிறந்த செயல் பிறிதொன்றில்லை. சிவபெருமானைச் சாதாக்கியவடிவாகிய சிவலிங்க வடிவமைத்துப் பூசித்தலும், சாளக்கிராமத்தில் விஷ்ணுவை ஆவாகித்து வழிபடுதலும், சிவனடியாரை மெய்யன்போடு பூசித்தலும் சிறந்த புண்ணியங்களாகும். சிவபத்தன் விஷ்ணுவை இகழ்ந்தாலும் வைஷ்ணவன் சிவபெருமானை நிந்தித்தாலும் இருவரும் தவறாது நரகம் புகுவர். ஏகாதசி தினத்தில் உபவாசமிருப்பவர் நற்புத்தி ரரைப் பெறுவர். பாதரட்சை, குடை என்பவற்றைத் தானஞ் செய்பவருக்கு யமபயம் இராது. தானஞ் செய்யாத நாள் சூனிய தினமாகும். ஆதலால், நாடோறும் இயன்றதைப் பிறருக்குக் கொடுத்து வரல்வேண்டும். ஒரு புண்ணியச் செயலை நியதி யாகச் செய்ய மனங்கொண்டுவிட்டால் அது பல புண்ணியத்தை வருவிக்கும்.

நீ இதற்கு முன் கொண்ட எட்டாவது பிறவியில் செய்த ஒரு புண்ணியத்தின் பயனாகச் செல்வம் படைத்த வணிகனாகப் பிறந்தாய். யமுனை நதியில் நீராடினாய். நீ அப்பிறவியிற் செய்த புண்ணியம் யாதெனச் சொல்லுவோம், கேள் :- மதுவனம் என்ற நாட்டிலே சாகுனி என்னும் பெயருடைய பெரிய தவத்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள். அவருள் நால்வர் துறவிகளாய் ஊர்கள்தோறும் திரிந்தனர். ஒருநாள் நீ அவர்களை அழைத்து உணவு கொடுத்தாய். அந்தச் சிறந்த புண்ணியமே உன்னை நல்வழிப்படுத்திற்று" என்றான் தென்புலத்தலைவன்.

அவ்வரலாறுகளைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்ட விகுண்டலன் தனது தமையன் நற்கதி பெறுவதற்கான வழியொன்று சொல்லுமாறு பின்னுங் கேட்டான். "ஒரு உண்மையான துறவிக்கு ஒருவேளை அன்னமிடுவதால் ஒருவன் பிறப்பு முதல் மரணம் வரையும் செய்த பாவம் முழுவதும் நீங்கும். ஆதலால், அந்தப் புண்ணியத்தை உன் சகோதரனுக்குத் தத்தஞ் செய்" என்றான் யமதருமன். உடனே விகுண்டலன் அவ்வாறு செய்தான். அதனால் இருவரும் சுவர்க்கலோக வாழ்வு பெற்றனர்.

# குரு லிங்க சங்கமம்

சென்ற இதழின் தொடர்ச்சி.....................................

அச்சுவேலி சிவஸ்ரீ கு. வைத்தீஸ்வரக்குருக்கள்.

சுயம்புலிங்கம், தேவிலிங்கம், திவ்வியலிங்கம், ஆர்ஷலிங்கம், மானுஷலிங்கம், இராக்ஷசலிங்கம், ஆசுரலிங்கம் எனப் பரார்த்த லிங்கம் ஏழு வகைப்படும். தானே தோன்றியது சுயம்புலிங்கம். இது பர்வதாகாரமாய் உள்ளது. தேவியினாலே பூசிக்கப்பட்ட லிங்கம் தேவிலிங்கம். தேவர்களாற்றாபிக்கப்பட்டது. தைவிகலிங்கம். முனிவர்களாற்றாபிக்கப்பட்டது ஆர்ஷலிங்கம், மானுடராற்றாபிக்கப்பட்டது மானுடலிங்கம். அசுரர்களாலும் இராக்ஷதர்களாலும் பூசிக்கப்பட்டது ஆசுரலிங்கமும் இராக்ஷத லிங்கமும் எனப்படும். விநாயகர் சுப்பிரமணி யரால் தாபிக்கப்பட்டது காணலிங்கம் எனப்படும்.

சிதம்பரத்திலுள்ள பர்வதாகார திருமூலத்தான லிங்கம் போன்றன சுயம்புலிங்கமாம். காஞ்சிபுரத்திலே ஏகாம்பரத்தில் காமாக்ஷி அம்மையாற் பூசிக்கப்பட்ட ஏகாம்பரநாத மகாலிங்கம் தேவிலிங்கமாம். திருச்செங்காட்டான் குடியில் விநாயகர் தாபித்துப் பூசித்த கணபதீச்சுர மகாலிங்கம் முதலியனவும் திருச்சேய்ஞல்லூரில் சுப்பிரமணியக் கடவுள் தாபித்துப் பூசித்த சத்தி கிரீசுரமகாலிங்கம் முதலியனவும் காணலிங்கம் எனப்படும். பிரமாவினாலே சீர்காழியில் தாபித்துப் பூசிக்கப்பட்ட பிரமபுரீசமகாலிங்கமும், விட்டுணு பூசித்தமால்வணங்கீசுர மகாலிங்கமும் விட்டுணு வாமனாவதாரம் செய்து திருமாணிக்குழியில் தாபித்துப் பூசித்த மாணிக்க வரதேசுர மகாலிங்கமும் திருக்கண்ணார் கோயிலில் இந்திரன் தாபித்துப் பூசித்த கண்ணாயிரேசுர மகாலிங்கமும் தைவிகலிங்கமாம். திருக்குற்றாலத்தில் அகத்தியரால் தாபித்துப் பூசிக்கப்பட்ட குறும்பலா வீசுர மகாலிங்கம் ஆரிடலிங்கமாம். இடும்பாவனத்தில் இடும்பனால் தாபித்துப்பூசிக்கபட்ட சற்குணநாதேசுரமகாலிங்கம் இராக்ஷசலிங்கமாம். திருஓண காந்தன்றளியில் ஓணன், காந்தன் என்னும் இரு அசுரராற் பூசிக்கப்பட்ட ஓணகாந்தேசுரமகாலிங்கம் அசுரலிங்கமாம். இராமேசுரம் முதலாகிய பன்னிரண்டு தலங்களில் தாபிக்கப்பட்ட மகாலிங்கங்கள் சோதிலிங்கம் எனப்படும்.

நினைத்த மாத்திரத்தில் பாவங்கள் நீக்கவல்ல பஞ்சபூத மகாலிங்கங்கள் ஐந்து உண்டு. அவை காஞ்சிபுரத்தில் பிருதிவிமயமான ஏகாம்பர லிங்கமும், காவேரிதீரத்தில் அப்பு மயமான ஜம்புகேசுரலிங்கமும், அருணாசலத் தில் அக்கினிமயமான அருணாசலலிங்கமும் பொன்முகலியாற்றில் வாயுமயமான திருக்காளத்திலிங்கமும் சிதம்பரத்தில் ஆகாயமயமான திருமூல லிங்கமுமாம். இவ்வைந்து லிங்கங்களைக் கண்களினால் தரிசித்தாலும், காதினாற் கேட்டாலும், வாயினாற் சொன்னாலும், மனதாற்றியானித்தாலும் இஷ்டசித்தி எய்தப்பெறுவர்.

இவையன்றி ஆதாரக்ஷேத்திரங்களும் உள்ளன. மூலாதார க்ஷேத்திரம் திருவாரூர். இதிற் சிவபெருமான் தியாகேசர் எனப்படுவர். சுவாதிட்டானம் திருவானைக்கா. அங்கே அவர் ஜம்புநாதர் எனப்படுவர். நாபித்தானமான மணிபூரகம் அருணாசலம். அங்கே அவர் அருணாசலேசுவரர் எனப்படுவார். இருதயஸ்தானமாகிய அநாஹதம் சிதம்பரம். அங்கே அவர் சபாபதி எனப்படுவர். கண்டத்தானமாகிய விசுத்தி திருக்காளத்தி. அங்கே அவர் காளாத்தீசுவரர் எனப்படுவர். புருவமத்தியஸ் தானமாகிய ஆஞ்ஞை காசி. அங்கே அவர் விசுவநாதர் எனப்படுவார். பிரமரந்திரம் கைலாசம்.இங்கே அவர் ஸ்ரீகண்ட பரமேசுரர் எனப்படுவர். துவாதசாந்தம் மதுரை. இங்கே அவர் சுந்தரேசுரர் எனப்படுவர் என்று திருவிளையாடற் புராணமும் அகஸ்தியங்கிதையும் கூறுகின்றன.

ஆன்மார்த்த பூசையில் உபயோகிக்கப்படும் இலிங்கங்கள் வாணலிங்கம் படிகலிங்கம் க்ஷணிகலிங்கம் முதலாகப் பலவகைப்படும். வாணாசுரன் என்பவன் ஒரு உழுந்து முதல் முழமீறாக உள்ள லிங்கங்களை மந்திரங் கொண்டு பூசித்தமையால் அவ்லிங்கம் வாணலிங்கம் எனப்படும், இவ்விலிங்கங்களில் ஆவாஹனம் வேண்டியதில்லை. சிவபெருமான் எப்பொழுதும் சாந்நித்தியராய் இருந்தருளுவார். லிங்காத்திரி, நேபா

ஸம் முதலிய இட்டலிங்கமாகப் பூசிக்கப்படின் சலலிங்கம் என்று சொல்லப்படும் பரார்த்த லிங்கமாகத் தாபிக்கப்படின் அசல லிங்கம் எனப்படும்.

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் அனுலோமர் அறுவருமே இட்டலிங்க பூசைக்கு அதிகாரிகள் இவருள்ளும் இடம் பொருள் ஏவல் முதலியன உடையோராய், சிவபூஜாவிதி முதலியவற்றை நன்கறிந்தவராய் உள்ளவரே சிலை முதலியவற்றாலாகிய லிங்கத்தைப் பிர திட்டை செய்வித்துக் கொண்டு சிவபூஜை செய் யலாம். மற்றையோர் க்ஷணிகலிங்கபூஜை செய் யக்கடவர். க்ஷணிகலிங்கமாவது பூசித்த வுடனே விடப்படும் இலிங்கமாம். க்ஷணிகலிங்கம் ஆற்று மண், சந்தனம் முதலாகப் பன்னிரண்டு பேதமாம்.

ஆன்மார்த்த பூசை செய்யாது பரார்த்த பூசை செய்தவர்கள் பூசையின் பயனை இழப் பார்கள். பிரம்மவிட்டுணுக்களும் ஆன்மார்த்த பூசை செய்தே தங்கள் தங்கள் அதிகார கிருத் தியங்களைச் செய்வர். குருவுக்குச் சம்மதி கொடுத்து அவரிடத்தில் ஏற்றுப் பூசித்த லிங்கத்தை நன்கு பூசியாது இடையில் விடுத்தோர் மீளா நரகடைவர். "திருநாம மஞ்செழுத்தும் செப்பா ராகில்" என்னும் தேவாரத்தால் உணரப்படும் சிவ பூசை செய்யாது உண்டவனது உணவு உணவாகாது. இவன் சிவார்ச்சனை யினின்று நீங்கிய முப்புரத்தசுரர் போலத் தண்டிக்கப்ப டுவன்.

திருக்கோயிலில் உள்ளது தூபி தூலலிங் கமாம். விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கமாம். அதற்கு முன் உள்ள பலிபீடம் பத்திரலிங்கமாம். இவ்வுண்மை நோக்கியே திருமூலநாயனார்,

> "தூயவிமானமுந் தூலமதாகுமா
> லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்
> பாய பலிபீடம் பத்திர லிங்கமா
> மாய வரனிலை யாய்ந்து கொள் வார்கட்கே"

என்று அருளிச் செய்தார்.

உயர்ந்த வருணத்தாருள் உறுப்புக் குறைந் தவர்களும், நான்கு வருணத்தாரல்லாதாரும், தங்கள் தங்கள் அதிகாரநுகுணமாக ஆசாரியரி டத்துத் தீக்ஷைபெற்றுத் தூபியினையும் கோபுரத் தையும் சிவனெனக் கண்டு இவற்றுக்கெதிரே பத்திர புஷ்பங்களைத் தூவித் துதித்தல் முறை யாம்.

சராசரப் பிரபஞ்சம் எங்கும் ஆன்மாக்களை இரக்ஷித்தல் வேண்டிச் சிவபெருமான் இலிங்க ரூபமாக விளங்குகிறார். அன்போடு வழிபடு பவர்களுக்கு அவ்வவ்விடங்களிலே வெளிப்பட்டு நின்று அவரவர் வேண்டிய இட்டசித்திகளை அருளுகின்றார். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றனையும் முறையாக வணங்குபவர் ஞானா சாரியனால் உண்மை ஞானம் விளங்கப் பெறு வார்கள். இதனை "மூர்த்தி தலந் தீர்த்த முறை யாற் றொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனத் தாயுமா னசுவாமிகள் உணர்த்தியருளினார். "சிவலிங் கத்தைத் தினந்தோறும் காலை மாலை உச்சி என்னும் மூன்று காலங்களிலும் பூசிக்க என்று உபநிடதம் கூறுகிறது. விட்டுணு சிவலிங்க அர்ச்சனை செய்தே உலகங்களை இரஷ்சிக்கும் உரிமை அடைந்தார். பிரமா சிருஷ்டிக்கும் அதிகாரத்தைப் பெற்றார். சிவலிங்க பூஜாபலத்தி னாலே தேவர் மனிதர் முதலியோர் செல்வத்தோடு வாழ்கின்றனர். சிலர் சத்துருக்களை ஜயித்துப் பூமியை அரசாட்சிசெய்தார்கள். சிலர் புத்திரர், பசு, சௌந்திரியம் முதலியவற்றை அடைந் திருக்கிறார்கள். சகல தருமங்களும் இடையூ றின்றி முற்றுப்பெறும் என்பதும், தம்மை அன் போடு வழிபடுபவர்களுக்குக் குழைந்து நிற்பார். என்பதும் காமாட்சி அம்மையார் செய்த சிவபூசை யினாலே பெறப்படும். சகல பாவங்களுக்கும் பிராயச்சித்தமாய் உள்ளது சிவபூசையாம் என் பது கயமுகாசுரன், சூரபதுமன் முதலாயினோ ரைச் சங்கரித்தமையாலே பாவம் ஒன்றும் ஏறப் பெறாத விநாயகர், சுப்பிரமணியர் செய்த லிங்கபூசையினாலே பெறப்படும். மேலும், அகங்க ரிப்புக்குப் பரிகாரமாய் முடிவதும், அதிபாதகத் துக்குப் பரிகாரமாய் உள்ளதும், பிரமகத்தி நோய்க்கு மருந்தாய் உள்ளதும், காலத்தைக் கடக்கச் செய்வதும் இலிங்கவழிபாடேயாம் என் பது பிரமர், விட்டுணு, தக்கன், அகத்தியர், மார்க்கண்டேயர் முதலாயினோர் செய்த லிங்க வழிபாட்டினாலே பெறப்படும். இது பற்றியே

திருஞானசம்பந்த சுவாமிகளும் 'பூத்தேர்ந்தாயின கொண்டுநின் பொன்னடி - யேத்தாதாரில்லை யெண்ணுங்கால்' என்றருளிச்செய்தனர். "வண்டு ளருந் தண்டுழாய் மாயோனிறுமாப்பும்- புண்டரிகப் போதுறையும் புத்தேளிறுமாப்பும் - அண்டர்தொழ வாமுனிறுமாப்பு மாலால- முண்டவனைப் பூசித்த பேறென்றுணர்ந்திலையால்" என்பது புராணம். சிவலிங்கவழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் செயற்பாலதேயாம். மலம் நீங்கிய சிவஞானிக ளும் பூர்வமலவாசனை தாக்காமைப் பொருட் டும், சிவானந்தம் மேன் மேல் வளர்தற் பொருட்டும் சிவலிங்கம் முதலிய திருமேனியையும் மெய்ய டியார்களையும் வழிபடல் வேண்டு மென்று சிவ ஞான போதம் முதலிய நூல்களில் உணர்த் தப்பட்டது. திருக்கோயிலுள்ளிருக்கும் திருமே னியை வழிபடல் ஞானிமுதல் நான்கு மார்க் கத்தாருக்கும் இன்றியமையாக் கடனேயாம். சிவாநுபூதிப்பெருவாழ்வுடையர்களாகிய திருஞா னசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்க வாசகசுவாமிகள் என்னும் சமயாசாரியர்கள் நால்வரும் தலந்தோறும் சென்று, சிவலிங்க வழிபாடு செய்து, தமிழ்வேதம் பாடியமையே இதற்குச் சான்றாகும். இது ஞானத்திற் சரியை எனப்படும். சிவலிங்கவழிபாடு நான்கு பாதத் தாராலும் செய்யப்படுமாயினும், அது அவரவர் கருத்து வகையால் வேறுபடும். சரியாபாதத்தினர் சிவலிங்கம் முதலிய திருமேனியையே சிவமெனக் கண்டு வழிபடுவர். அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள் செய்வர். கிரியா பாதத்தினர் நிஷ்களப் பொருளாகிய சிவபெருமான் மந்திரங்களினால் சிவலிங்கம் முதலிய திருவுருக் கொண்டாரென்று மந்திர நியாசத்தினாலே வழிபடுவர். யோக பாதத்தினர் இருதயமெங்கும் வியாபித்திருக்கும் சிவபெ ருமான் இந்தச் சிவலிங்கத்திலும் அதிட்டித்து நின்று பூசை கொள்வார் என்று சாத்திய மந்தி ரங்களினாலே வழிபடுவர். அவர்களுக்குக் கடைந்தவிடத்துத் தோன்றும் அக்கினி போலவும், கறந்தவிடத்துத் தோன்றும் பால்போலவும், அவ் வப்பொழுது வெளிப்பட்டு -நின்று அருள்செய்வார். ஞானிகள் இம்முத்திறத்தாரும் போல ஓரிடமாகக் குறியாது அன்பு மாத்திரத்தால் அங்கே வழிபடு வார்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கன்றை நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போல அவ்வன்பே தாமாகிக் கருணைமிகுதியி னால் எப்பொழுதும் வெளிப்பட்டுநின்று அருள் செய்வர்.அது "திருக்கோயிலுள்ளிருக்குந் திரு மேனி தன்னை" என்னும் சிவஞானசித்திச் செய்யுளால் உணரப்படும். தற்காலத்திலே அநுப வஞானமும் சாஸ்திர ஞானமும் கிரமமாகப் பெறாதவர் சிலர் தங்களை ஞானிகளெனச் சொல்லிக் கொண்டு, சரியை கிரியைகளை இகழ்ந்து, மீளா நரகத்துக்கு ஆளாகின்றார்கள்.

பீடலிங்க ரூபமாயுள்ள சிவலிங்கமானது சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம் கர்த்திருசாதாக்கியம், கன்மசா தாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்களுள் ஒன்றாகிய கன்மசா தாக்கியமாகும். கந்தபுரா ணத்திலே சுப்பிரமணி யக்கடவுள் "ஐவகை யுருவி லொன்றை" சிவாகம விதியாற் பூசித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சதா - எப்பொ ழுதும். ஆக்கியம் - புகழப்படுவது. எனவே, நாமரூபாதிகள் இல்லாத சுத்தசிவம், நாமரூபமு டையவராய் அன்பர்களாற் புகழப்படுபவர் என்பது கருத்து.

கன்மசாதாக்கியமானது இச்சாசத்தியின் அம்சமாய்த் தோன்றியது. சிவபெருமான் ஆன் மாக்களது தியான பூஜா நிமித்தமாகச் சகல நிஷ்களத் திருமேனி கொண்ட நிலை ஆவுடை யாளுடன் கூடிய லிங்கமாம். சிவலிங்கம் ஞான சத்தியையும் அதன் கீழ்க் காணப்படும் ஆவுடை யாள் கிரியாசத்தியையும் குறிக்கும். சிவலிங்கத் திலே எப்பொழுதும் ஓர் அசைவு உண்டு. அது வே, சத்தியாகும். ஆன்மாக்களின் பாசத்தை நீக்குவதற்காக அசைதற் சக்தி இலிங்கத்தைச் சுற்றிக் கொண்டு இருக்கிறது. அவ்வசைவு லிங் கத்தில் உண்டென்பதை உணர்த்துவதற்காக ஆவுடையாள் இலிங்கத்தைச் சுற்றிக் கீழடங்கி அமைந்திருக்கிறது. ஆவுடையாளின் ஓர் பக்கத் தில் நீண்டிருக்கும் கோமுகியானது ஆன்மாக் களைத் திருநோக்கம் செய்யும் குறிப்பாகும். சிவசாதாக்கியம் முதலிய நான்கும் ஒன்றை யொன்று பற்றி, ஐந்தாவதாகிய கன்ம சாதாக் கியத்தை அடைந்திருத்தலின், இது மற்றையசா தாக்கியங்களிலும் விசேடமுடையதாய் இருக்கும்.

# நினைவிற் கொள்வதற்கு

தாரண கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 01 | 16.11.2004 | செவ்வாய் | மாதப்பிறப்பு |
| 02 | 17.11.2004 | புதன் | ஸ்கந்தஷஷ்டி விரதம் |
| 09 | 24.11.2004 | புதன் | பிரதோஷ விரதம் |
| 11 | 26.11.2004 | வெள்ளி | பூரணை விரதம், திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், சர்வாலய தீபம், கணம்புலர் நாயனார் குருபூசை |
| 12 | 27.11.2004 | சனி | விஷ்ணுவாலயதீபம், விநாயக விரதாரம்பம் |
| 15 | 30.11.2004 | செவ்வாய் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 21 | 06.12.2004 | திங்கள் | மெய்ப்பொருள்நாயனார் குருபூசை |
| 22 | 07.12.2004 | செவ்வாய் | ஆனாயநாயனார் குருபூஜை |
| 24 | 09.12.2004 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 26 | 11.12.2004 | சனி | அமாவாசை விரதம் |
| 27 | 12.12.2004 | ஞாயிறு | மூர்க்கர்நாயனார் குருபூசை |
| 28 | 13.12.2004 | திங்கள் | சிறப்புலியர்நாயனார் குருபூஜை |
| 30 | 15.12.2004 | புதன் | சதுர்த்தி விரதம் |

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

- தமிழ்வேள்வி
- திருவாசகம்
- Understanding Saiva Siddhanta Philosophy.
- And Outline of Saivism
- சைவத்தை அறியுங்கள்.
- சிவபுராணம் விளக்கவுரை
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம்
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு (பிற அறிஞரின் கட்டுரைகளின் தொகுப்பு)
- மகாபைரவர்
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா
- ஈழத்துச் சித்த சிரோமணிகள்

ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு.

கிடைக்கும் இடம்:

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.


எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.

தொ.பே: 2478885


## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

***C. Navaneethakumar,***
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*


Regd No. QD/13/News 2004 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் கலர் பிரின்ஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.